மாலை 49 மணி 2 பிப்ரவரி 2007 விலை ரூ10

திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை வெளியீடு

அடைத்த கதவிற்கு உடைக்காத தேங்காய் பூஜை

மகர சிவராத்திரி



அருள்மிகு பூங்காவனத்தம்மன்
என்கிற
அருள்மிகு அங்காள பரமேஸ்வரி
திருக்கோயில்

நெ.95 புட்லூர் மதுரா, இராமாபுரம், திருவள்ளூர் மாவட்டம்.
மகா சிவராத்திரி விழா அழைப்பிதழ்

மாயவன் தங்கை நீ! மரகத வல்லி நீ!
மணி மந்த்ர காரி நீயே!
மாயா சொரூபி நீ! மகேஸ்வரியுமான
மலையரசன் மகளான நீ!
தாயே மீனாட்சி நீ! சற்குண வல்லி நீ!
தயாநிதி விசாலாட்சி நீ!
தரணியில் பெயர் பெற்ற பெரியநாயகியும் நீ!
சரவணனை ஈன்றவளும் நீ!

பேய்களுடனாடிநீ! அத்தனிட பாகமதில்
பேர்பெற வளர்ந்தவளும் நீ!
பிரணவ சொரூபி நீ! பிரசன்ன வல்லி நீ!
பிரியுவுண்ணா மலையும் நீ!
ஆயிமகமாயி நீ! ஆனந்த வல்லி நீ!
அழகிய புட்லூர் கிராமத்தில்
புத்துருவாய் வாழ்கின்ற
அன்னையே அங்காளியே!

பேரன்புடையீர்!

உலகனைத்திற்கும் தாயாய் விளங்கும், ஸ்ரீ அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகியாகிய அன்னை பரமேஸ்வரி, துர்வாசமாமுனிவரின் சாபத்தால், பிரம்மனது கபாலம் இடது கையில் தாங்கி, திரிசூலம் ஏந்தி, அங்காள அம்மையென உருவம் தாங்கி, வேண்டியவர்க்கு வேண்டியபடியே அருள்பாலித்து, சீர்மனச் சான்றோர்கள் நிறைந்த தொண்டை நாட்டின் முப்பத்திரெண்டு தலங்களில் தலப்பெருமைகளைக் கொண்டு விளங்கும் எண்,95, புட்லூர் மதுரா, இராமாபுரம் கிராமத்தில் கோயில் கொண்டு அருளாட்சி செய்துவரும் ஸ்ரீ அங்காள பரமேஸ்வரிக்கு கடந்த பலநூறு ஆண்டுகளாக ஒவ்வொரு ஆண்டும் மகா சிவராத்திரியன்று மகா சிவராத்திரி உற்சவமும், மறுநாள் அமாவாசையன்று பிற்பகல் 1.00 மணியளவில் மயான உற்சவமும் நடைபெறும். அதுபோலவே இவ்வாண்டும் அன்னை அங்காள பரமேஸ்வரிக்கு கீழ்கண்ட நிகழ்ச்சி நிரல்படி இறையருளால் விழா நடைபெறவுள்ளது. பக்தர்கள் அனைவரும் வருகைபுரிந்து விழாவில் கலந்து கொண்டுஅன்னையின் அருள்பெற அன்புடன் அழைக்கிறோம்.

நாள்	நிகழ்ச்சி
மாசி மாதம் 3ம் தேதி 15.02.07 - வியாழக்கிழமை	பந்தக்கால், கொடியேற்றம் அம்மனுக்கு காப்பு கட்டுதல்
மாசி மாதம் 4ம் தேதி 16.02.07 - வெள்ளிக்கிழமை	அம்மனுக்கு அபிஷேகம் அம்மனுக்கு பொங்கலிட்டு படையலிடுதல் அம்மன் திருவீதி உலாவருதல்
மாசி மாதம் 5ம் தேதி 17.02.07 - சனிக்கிழமை	அம்மன் மயான கொள்ளை வைபவம்

அனைவரும் வருக!   அம்மன் அருள் பெறுக!

இப்படிக்கு
என். தங்கைய்யா பி.எசி., பி.எல்.,
தக்கார்
மற்றும்
கிராம பொதுமக்கள்

திருக்கோயில்

திருவள்ளுவர் மாலை 49 | ஆண்டு 2037 மணி 2 | விய- மாசி பிப்ரவரி 2007

அன்பார்ந்த வாசகப் பெருமக்களே!

வணக்கம்.

சைவப் பெருமக்களால் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுவதும், சிவபெருமானுக்குரிய விரதங்களில் முக்கியமானதொன்றாகக் கருதப்படுவதுமான சிவராத்திரி விரதம், மாசித் திங்களில் வரும் மகாசிவராத்திரியன்று கொண்டாடப்படுகிறது. மகாசிவராத்திரியன்று குலதெய்வங்களை வழிபட்டு, கொண்டாடி மகிழும் நாளாகவும் கடைப்பிடிக்கப்படுகிறது. இம் மகாசிவராத்திரியின் தத்துவ விளக்கங்களும், கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளும் இவ்விதழில் வழங்கப்பட்டுள்ளன. நாமும் மாசித்திங்களில் வரும் இம்மகாசிவராத்திரி திருநாளில் சிவபெருமானையும், குலதெய்வங்களையும் வழிபட்டு வாழ்வில் வளம் பெறுவோமாக.

இறைவனுக்கு வலது பக்கம் இருக்கும் பாக்யம் பெற்றவரும், நாவுக்கரசர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய பெருமக்களால் போற்றிப் பாடப்பட்டவருமான "கண்ணப்பரின்" சிறப்பினை "கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பன்" எனும் தலைப்பில் முத்துச் சிதறலாக வாகீசக் கலாநிதி பேராசிரியர் முனைவர் திரு. ச. கணபதிராமன் அவர்கள் வழங்கியுள்ளார்.

வைணவத்தில் தனி இடம் பெற்றுள்ள சூடிக் கொடுத்த சுடர்க்கொடியாள் ஆண்டாள் நாச்சியார் பாசுரங்களில் சங்கத் தமிழுக்குரிய பண்புகள் பொதிந்து கிடப்பதையும், உயர்தனிச் செம்மொழியாம் தமிழ் மொழியை அவர் எடுத்தாண்டு இன்னிசையால் பாடிக் கொடுத்துள்ளதையும் ஆய்ந்து, சிந்தனைக்கு விருந்தளிக்கும் சிறந்த சிந்தனைப் படைப்பொன்றை "ஆண்டாள் தமிழை ஆண்டாள்" என முனைவர் திரு. தி. இராசகோபாலன் அவர்கள் வழங்கியுள்ளார்.

பிறர்படும் துன்பத்தை தன் துன்பமாகக் கருதி அதனைப் போக்க உதவும் மனித நேயமே ஆன்மநேயம். திருமருகல் திருத்தலத்தில், ஓர் அபலைப் பெண்ணின் வேதனையையும், விசும்பலையும் போக்கச் செய்யாது மருகச் செய்தது சரியா என இறைவனிடம், ஞானசம்பந்தப் பெருமான், பேசுவது போன்று ஏசும் உறையில் முறையீடு செய்கின்றார். ஆன்மீகத்தில் மனித நேய பங்களிப்பில் முத்தாய்ப்பாக விளங்கும் இந்நிகழ்ச்சியினை "மனித நேயப் பங்களிப்பில் ஆன்மீக முத்திரை" யாக தமிழாகரர் தெ. முருகசாமி அவர்கள் ஆய்வுக் கட்டுரை வழங்கியுள்ளார்.

நாடு உய்ய நல் வழியை பாசுரங்கள் மூலம் உணர்த்தியவரும், நாவீறு உடையவர் என்றும் உறையிலிடாதவர் என்றும், வைணவப் பெருமக்களால் போற்றப் பெறும் பரம உபசாரகர் திருமழிசைப்பிரானின் பெருமைகளை, இந்திரா ஆராவமுதன் அவர்களும் "வாமன அவதாரத்தை" ஆழ்வார் பெருமக்கள் தங்களது அருளிச் செயல்களில் போற்றிப் புகழ்ந்துள்ளதை பாச்சுடர் வளவ. துரையன் அவர்களும் வழங்கியுள்ளனர்.

கந்தர் அனுபூதி விளக்கத்தினைத் தொடராக வழங்கி வரும் டாக்டர் சரசுவதி இராமநாதன் அவர்களின் தொடர் கட்டுரையும், திருமந்திர உபதேசத் தொடர் வழங்கி வரும் திருமந்திரச் செல்வர் திரு.டி.வி. வெங்கட்ராமன் அவர்களின் தொடரும் இவ்விதழில் இடம் பெற்றுள்ளன.

அன்னை காமாட்சி அருளாட்சி செய்து வரும் தேவதானப்பட்டி மூங்கிலணை காமாட்சியம்மன் திருத்தலம் குறித்தும், இமயன் வழிபட்ட தண்டீஸ்வரர் திருத்தலம், பேயாழ்வார் அவதரித்த மாதவபுரம் திருத்தலத்தில் அமைந்துள்ள அருள்மிகு மாதவப் பெருமாள் திருக்கோயில் திருத்தலப் பெருமையும் இவ்விதழில் திருத்தல உலாக்களாக வழங்கப்பட்டுள்ளன.

இதழினைப் படித்து இன்பமுறுவோமாக.

அன்புள்ள

(த. பிச்சாண்டி, இ.ஆ.ப.)

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி சாலை,
சென்னை - 600 034.

பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் 27.1.07 அன்று நடைபெற்ற மலைக்கோயில் சின்னக்குமாரர் மண்டபத் திறப்பு விழாவில், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. கேஆர்.பெரியகருப்பன் அவர்கள், இந்து சமய அறநிலையத் துறை சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் திரு.த.பிச்சாண்டி இ.ஆ.ப. அவர்கள், திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் திருமதி இரா. வாசுகி இ.ஆ.ப. அவர்கள், அறங்காவலர் குழுத்தலைவர் திரு. எஸ்.வி. பாலசுப்பிரமணியம் அவர்கள், இணை ஆணையர் / செயல் அலுவலர் திரு.மு.க.பாலசுப்ரமணியன் அவர்கள் மற்றும் அறங்காவலர்கள் திரு. மோகன் பி. கந்தசாமி, திருமதி இந்திரா ரவிச்சந்திரன், திரு. ஆ. நாகராஜன் ஆகியோர்.

இதழின் உள்ளே ....

1	மகாசிவராத்திரி	5
2	கலை மலிந்த சீர்நம்பி கண்ணப்பன் - பேராசிரியர் முனைவர் வாகீசக் கலாநிதி ச.கணபதிராமன்	7
3	ஆண்டாள் தமிழை ஆண்டாள் - முனைவர் திரு.தி.இராசகோபாலன்	11
4	தேவதானப்பட்டி அருள்மிகு மூங்கிலணை காமாட்சி அம்மன்	14
5	வேலும் மயிலும் துணை - போரசிரியர் டாக்டர் சரஸ்வதி இராமநாதன்	19
6	அருளிச் செயல்களில் வாமன அவதாரம் - பாச்சுடர் வளவ துரையன், எம்.ஏ. பி.எட்	21
7	மனித நேய பங்களிப்பில் ஆன்மீக முத்திரை - தமிழாகரர் தெ. முருகசாமி	23
8	திருமழிசைப் பிரான் - இந்திரா ஆராவமுதன்	29
9	திருமந்திர உபதேசம் - திருமந்திரச்செல்வர் டி.வி.வெங்கட்ராமன் இ.ஆ.ப.(ஓய்வு)	32
10	இயமன் வழிபட்ட வேளச்சேரி தண்டீஸ்வரம்	35
11	அருள்மிகு மாதவப்பெருமாள் திருக்கோயில் - மைலாப்பூர்	38

அருள்மிகு சிவபெருமான்

16 போற்றிகள்

மூவர் தேவாரம், திருவாசகத்திலிருந்து தொகுத்தது



ஓம் அடியார் பெருமை அறிவாய் போற்றி

ஓம் ஆலமர நீழலில் அமர்ந்தாய் போற்றி

ஓம் ஆலாலம் உகந்துண்ட ஆதீ போற்றி

ஓம் ஏத்தாதார் மனத்து அகத்து இருளே போற்றி

ஓம் ஓங்காரத்து உட்பொருளாய் நின்றாய் போற்றி

ஓம் கங்கையைச்சடையில் கரந்தாய் போற்றி

ஓம் காலனைக் காய்ந்தஎம் கடவுள் போற்றி

ஓம் சிற்றம் பலம்மேய செல்வா போற்றி

ஓம் சுண்ணவெண் ணீறு துதைந்தாய் போற்றி

ஓம் செந்துவர் வாய்உமை பங்கா போற்றி

ஓம் செற்றவர்தம் புரம்எரித்த சிவனே போற்றி

ஓம் தென்னாடு உடைய சிவனே போற்றி

ஓம் மந்திரமும் மறைப்பொருளும் ஆனாய் போற்றி

ஓம் முன்னே தோன்றி முளைத்தாய் போற்றி

ஓம் மூவாத் தமிழ்ச்சங்க முதல்வா போற்றி

ஓம் வேத விழுப்பொருளே போற்றி போற்றி

காலச்சுவடுகள்

தஞ்சாவூர் மாவட்டம் கூகூரில் காணப்படும் கல்வெட்டு ஒன்று அதிராசேந்திரன் தன் மூன்றாம் ஆட்சியாண்டில் கொடிய நோயால் துன்புற்றனன் என்றும் இவ்வரசன் உடல் நலனுறுதல் வேண்டும் என்று அவ்வூர்க் கோயில் இறைவன் திருமுன் தேவாரப் பதிகங்களை நாடோறும் இருமுறை ஓதினர் என்றும் குறிப்பிடுகின்றது. இதனான் நோய்வாய்ப்பட்டார் உடல் நலன் எய்துதற் பொருட்டுத் திருப்பதியம் விண்ணப்பிக்கச் செய்யும் பழக்கம் நம் முன்னோர் காலத்திலேயே நிலவியிருந்தது என்று அறியலாம்.

மகாசிவராத்திரி

சிவபெருமானுக்குரிய சிறப்பான எட்டு விரதங்களுள் ஒன்று மகாசிவராத்திரியாகும். இது சைவர்களால் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இந்த சிவராத்திரி விரதத்தை எண்ணிலாதவர்கள் கடைப்பிடித்துப் பலனடைந்திருக்கிறார்கள்.

மாசி மாத தேய்பிறைச் சதுர்த்தசியை ஒட்டிக் கொண்டாடப்படும் மகாசிவராத்திரி இந்தியாவெங்கும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. அன்று இரவு முழுவதும் பூஜைகளும், பஜனைகளும், கலைநிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன.

சிவபூசையைச் செய்ய விரும்புபவர்கள் சிவராத்திரியின் மூன்றாவது காலத்தில் உரிய குருவின் மூலம் சிவலிங்கத்தையும் மந்திரதீட்சையையும் பெற்று பூசையைத் தொடங்குவது சிறப்புடையது என்று ஆன்றோர்கூறுவர்.

சிவராத்திரி விரதத்தை அதன் பயன் தெரியாது எதிர்பாராது தற்செயலாக அனுஷ்டித்த போதும் அன்பினால் ஆசாரங்கள் குறைந்த நிலையில் அனுஷ்டித்தபோதும் மேலான பலன்களை சிவபெருமான் அளித்தருள்கிறார். விரதங்களுள் தலையாயது சிவராத்திரி விரதமேயாகும்.

சிவராத்திரி பெயர் விளக்கம்

''ராத்திர'' என்ற சொல்லுக்கு யாவும் செயலற்று ஒடுங்கி நிற்றல் என்பது பொருளாகும். இதனால் உயிர்கள் செயலற்று ஒடுங்கி நிற்கும் காலம் ராத்திரி எனப்பட்டது. உண்மையான ராத்திரி என்பது உயிர்கள் ஒடுங்கி யாவும் செயலற்று விளங்கும் காலமாகும். அதுவே மகாசங்கார காலம், பிரளயகாலம், ஊழிக்காலம் எனப்படும். இந்த வேளையில் பஞ்சபூதங்களும் செயலற்று மாயையில் ஒடுங்கி எங்கும் இருள் செறிந்து காணப்படும். அந்த இருளில் உலகம் செயலற்று எங்கும் அமைதி நிலவும். இந்நிலையில் சிவபெருமான் ஒருவரே செயலாற்றுவார். அவரை அடுத்த தேவி அவருக்குப் பூசனை புரிவாள். அந்த அகண்டாகாரமாகிய இரவே சிவராத்திரி எனப்படும். அதனைக் குறிப்பிட எழுந்ததே சிவராத்தியாகும்.

''ராத்ர'' என்பதற்குப் பூசித்தல் என்பதும் ஒரு பொருளாகும். சிவனை பூசிக்கத்தகுந்த இரவே சிவராத்திரி எனப்படும்.

இயமனும் சிவராத்திரியும்

சிவராத்திரி வேளையில் பெருமானைப் பூசிக்கும் மார்கண்டேயனைப் பிடிக்க வந்த யமன் உதைபடுவது, சிவராத்திரி காலங்களில் கொடுமை நிரம்பிய வேடன் விழித்திருந்து வில்வக்கிளையை உதிர்த்ததால் சிவலோகம் செல்ல அதனைத்தடுக்க வந்த யமன் உதைபடுவது பின்னாளில் அவனுக்கு சிவராத்திரி மகிமை உரைக்கப்படுவது என்பன போன்றவை இது குறித்து கதைகளில் காணப்படும் பொது அம்சமாகும். திருவைகாவூர்ப் புராணத்தில் யமன் விமோசன சருக்கம் என்ற ஒரு பகுதியும் உள்ளது.

இதனை நோக்க சிவராத்திரியின் அடிப்படைக் கருத்து ஆன்மாவானது தனது வினைகளை நீக்கிக் கொண்டு யமவாதனையை அகற்றி சிவபெருமானுடன் ஐக்கியமாவதேயாகும். சிவராத்திரியின் நான்காம் காலத்தில் மிருத்துஞ்சய மந்திரத்தை ஓத வேண்டும் என்று பெரியோர்கள் கூறுவதும் இங்கு எண்ணத்தக்கதாகும்.

சிவராத்திரி தத்துவம்

உணவும், உறக்கமும் உயிர்க்குப் பகையாகும். இங்கு உணவு என்பது வினைகள் அதனைச் செய்யச் செய்ய வினைகள் மூண்டு திரும்பத் திரும்ப பிறக்க நேரும். உறக்கம் என்பது மாயைக்குட்பட்டு மயங்குதலாகும். ஆதலின் உணவு நீக்கம் என்பதும் வினைகளை அகற்றிக் கொள்வதும், விழித்திருத்தல் என்பது ஆன்மா தன்னை உணர்ந்து கொள்வதும் ஆகும்.

சிவராத்திரியில் உண், உறக்கம் ஒழிப்பதென்பது உண்மையில் ஆன்மா வினைகளை வென்று தன்னை உணர்ந்து கொள்வதேயாகும்.

சிவராத்திரியின் நான்கு காலங்களிலும் பூசனை செய்யத்தக்க பொருட்கள்

சிவராத்திரி பூசையில் சிவலிங்கத்திற்குப் பால், பஞ்சாமிருதம், பழங்கள் முதலிய அனைத்தாலும் அபிஷேகம் செய்தாலும் ஒவ்வொரு காலத்திலும் செய்யவேண்டிய சிறப்பான அபிஷேக அலங்காரம் நிவேதனம் ஆகியவற்றைப் பெரியோர் வகுத்துள்ளனர். இவற்றைக் கொண்டு வழிபாடு செய்வது கூடுதல் நலம் பயப்பதாகும். எனவே அப்பட்டியல் இங்கு இடம் பெறுகிறது.

செயல்	முதற்காலம்	இரண்டாம் காலம்	மூன்றாம் காலம்	நான்காம் காலம்
அபிஷேகம்	பஞ்சகவ்யம்	பஞ்சாமிரும் (தேன், சர்க்கரை தயிர், பால், நெய்)	தேன்	கருப்பஞ்சாறு
மேற்பூச்சு	சந்தனம்	பச்சைகற்பூரம்	அகில்	கஸ்தூரி
பரிவட்டம்	பட்டு	பருத்தி	கம்பளி	மலர்ஆடை
பரிவட்டம் (ஆடை வண்ணம்)	சிவப்பு	மஞ்சள்	வெள்ளை	பச்சை
நிவேதனம்	காய்கறிகள் அன்னம் பலகாரங்கள்	பரமான்னம் லட்டு	மாவு, நெய் சேர்த்த பலகாரங்கள் பாயசம்	கோதுமை, சர்க்கரை, நெய் சேர்த்த பலகாரங்கள்
வேதம்	இருக்கு	எஜுர்	சாமம்	அதர்வணம்
திருமுறை	சிவபுராணம் பஞ்சபுராணத்துடன்	இருநிலனாய்	லிங்கபுராணக் குறுந்தொகை	போற்றி திருத் தாண்டகம்
தீபம்	விளக்கெண்ணெய்	இலுப்பைஎண்ணெய்	நெய்	நல்லெண்ணெய்
தத்வதீபம்	ரதாரத்தி	ஏகதீபம்	கும்பதீபம்	மகாமேருதீபம்
அட்சதை	அரிசி	ரவை	கோதுமை	உளுந்து, பயறு, தினை முதலிய ஏழு தானியங்கள்
மலர்கள்	திருநீற்றுபத்திரி தாமரை, கரவீரம்	தாமரை வில்வம்	அறுகு ஆத்தி, தாழம்பூ	எல்லாவகை மலர்களாலும்
பழங்கள்	வில்வப்பழம்	பலாப்பழம்	மாதுளை	வாழை முதலிய அனைத்துவகைப் பழங்களும்

நன்றி. சிவமஞ்சரி
பூசை.அருண வசந்தன்



காந்த ஊசியானது எப்பொழுதும் வடக்கு நோக்கியே நிற்கின்றது. ஆதலால் தான் கடலில் செல்லும் கப்பல் திசைதவறுவதில்லை. மனிதனுடைய உள்ளம் கடவுளை நோக்கியதாக இருக்கும் வரையில் இலௌகிகப்பற்று ஆகிய சமுத்திரத்தில் அவன் வழி தவறிக் கெடமாட்டான்.

- ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர்

கலை மலிந்த சீர்நம்பி கண்ணப்பன்

பேராசிரியர் முனைவர்
வாகீசக் கலாநிதி
ச.கணபதிராமன்.



அறுபான் மும்மைநாயன்மார்களுள் கண்ணப்பருக்குத் தனிச் சிறப்பு உண்டு. சுந்தர மூர்த்தி சுவாமிகள் தமது திருத்தொண்டத் தொகையில் அறுபத்து மூன்று நாயன்மார்களைக் குறிக்கும் போது அடைகொடுத்து சிறப்புப் பெயர் தந்து குறிப்பிடுவார். எடுத்துக் காட்டாக ''இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்'' என்று குறிப்பிடுவார். இதைப்போன்று கண்ணப்பரைக் குறிப்பிடும்போது

''கலை மலிந்த சீர்நம்பி கண்ணப்பருக்கும்'' அடியேன் என்று குறிப்பிடுகிறார். கலை மலிந்த என்று குறிப்பிடுவதால் கண்ணப்பர் கலைகளில் சிறந்து விளங்கினாரா என்ற வினா எழுவது இயற்கையே.

கண்ணப்பர் கலைகளில் சிறந்தவரே. கலை என்பது, வெறும் எழுத்தும் படிப்பும் மட்டுமல்ல. தங்களின் குடும்பங்களில் வாழையடி வாழையாக வரும் கலையுமாகும்.

கண்ணப்பர் தமது குடும்பக் கலையான வில்வித்தை வேட்டையாடுதல், மக்களைக் காத்தல், மலைவளம் காணுதல், விலங்குகள் பற்றி அறிவு, அவற்றின் நடமாற்றம், மலையிலுள்ள மரங்கள் செடி கொடிகளின் தன்மை, மலையிலுள்ள மூலிகைகள் ஆகிய அனைத்திலும் தேர்ந்து தெளிந்தார். கலைகள் அனைத்தையும் இவர் முற்றும் கற்றார் என்பதை சேக்கிழார்

''பொற்றட வரையின் பாங்கர்ப் புரிவுறு
கடன்முன் செய்த
விற்றொழிற் களத்தில் நண்ணி
விதிமுறை வணங்கி மேவும்
அற்றை நாள் தொடங்கி நாளும்
அடற்சிலை ஆண்மைமுற்றக்
கற்றனர் என்னை யாளுங் கானவர்க்கரிய
சிங்கம்''.

என்று பாடியுள்ளார். இந்த தேர்ச்சியை அரங்கேற்றம் செய்தார்கள்.

இறைவனையறிந்திடக் கலையா?

கலை என்பது கடவுளை அறியும் வரிகளைக் காட்டும் கருவி என்று முன்னோர்கள் கருதினார்கள். கல்வியின் பயனே கடவுளை அறிதல் என்பது முன்னோர் கொள்கை. இதனை திருஞானசம்பந்தர் பெருமான்.

''கல்லார் நெஞ்சில்
நில்லான்ஈசன்
சொல்லாதாரோடு
அல்லோம் நாமே''

என்று குறிப்பிடுகிறார்.
திருவள்ளுவர்

''கற்றதனால் ஆயபயன் என்கொல்
வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்.''

என்று கல்வியின் பயன் இறைவனை அறிவதற்கே என்று குறிப்பிடுகிறார்.

இந்தக் கல்வியே முழுமையான கல்வி என்பது சான்றோர் கருத்து. கண்ணப்பர் தம் குடும்பக் கலையினையும் கற்று இறைவனை உணரும் கல்வியினையும் இயற்கையாகவே பெற்றதால் கலைமலிந்த சீர்நம்பி என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் குறிப்பிட்டுள்ளார்கள்.

பிறப்பும் வளர்ப்பும்

காளத்தி மலையில் உடுப்பூரில் நாகன், தத்தை என்ற அரச தம்பதியர் வாழ்ந்து வந்தனர். வேடர் குல மக்களாகிய மலைவாழ் மக்களுக்கு நாகன் தலைவன். இவர்களுக்கு நீண்ட நெடு நாட்களாக குழந்தை இல்லை. இவர்கள் குழந்தைப்பேற்றை எண்ணி முருகனை வேண்டினார்கள். முருகனுக்கு படையலிட்டு இசைமுழக்கங்கள் செய்தனர். தேவராட்டி ஒருத்தியின் மீது முருகன் ஆவேசமுற்று வந்தான். அருள் வாக்கு தந்தான். இதனை சேக்கிழார்.

''பொரு அருள் சிறப்பின் மிக்கார்
இவர்க்கு, இனிப் புதல்வர்ப் பேறே
அரியது என்று எவரும் கூற
அதன்படு காதலாலே
முருகு அலர் அலங்கல் செவ்வேள்
முருகவேள் முன்றில் சென்று
பரவுதல் செய்து, நாளும்
பராய்க்கடன் நெறியில் நிற்பார்''

என்று குறிப்பிடுகிறார். நாகனுக்கும் தத்தைக்கும் அழகிய ஆண் குழந்தை பிறந்தது. அந்த குழந்தைக்கு பெயர் சூட்டினார்கள்.

திண்ணப்பன்

நாகன் தன் மகனுக்கு திண்ணன் என்று பெயர் சூட்டினான். குழந்தை திண்மையாக இருந்தமையால் திண்ணன் எனப் பெயர் சூட்டினான் என்பர். ஆனால் சிவபெருமானுக்கு திண்ணன் என்ற பெயர் உண்டு. திருநாவுக்கரசர் ''திண் சிலை கைக்கொண்ட போரானை'' என்று குறிப்பிடுகிறார். திண் சிலையைத் தாங்கியவன் திண்ணன். ஆகவே முருகன் அருளால்பிறந்த குழந்தை திண்ணன் என்ற பெயரைத்தாங்கியது.

முதல் வேட்டை

திண்ணன் பல கலைகளில் சிறந்து இறைவன் அருள் பெற்று கலைகளில் முதிர்ச்சியடைந்தான். திண்ணப்பருக்கு வயது பதினாறு ஆயிற்று. வேடர்கள் தங்கள் தலைவன் நாகனிடம் வந்து விலங்குகள் பயிர்களை அழிக்கின்றன. வேட்டையாடச் செல்ல வேண்டும் என்றனர். நாகன் தனக்கு மூப்பு எய்தி விட்டது. என் மகன் திண்ணன் பொறுப்பை ஏற்பான். நீங்கள் வேட்டைக்கு அழைத்து செல்லுங்கள் என்றான்.

முதல் வேட்டையான கன்னி வேட்டைக்கு திண்ணன் செல்லுவற்கு முன்பு தேவராட்டியை அழைத்து தெய்வப்பூசைநடத்தினர். தேவராட்டி தெய்வங்களுக்குப் பூசைச் செய்து திண்ணனை வாழ்த்தி ஊட்டுக் கொடுத்து வில்லைக் கையில் கொடுத்து ''மரபைக் காத்து வேட்டையில் வெற்றி பெறுக'' என்று அனுப்பினார்.

தேவராட்டி

தேவராட்டி என்பவர் தெய்வத்திற்கு வழிபாடு செய்கின்ற மூதாட்டியான பெண். தெய்வத் தொண்டே திருத்தொண்டு எனக் கொண்டு **மன்னையும்** மக்களையும் நல்வழிப்படுத்தும் நாயகி. பழங்காலத்தில் இந்த குலத்தில் பிறந்தவர் தான் தெய்வத்திற்கு பூசனை செய்ய வேண்டும் என்ற விதியில்லை. ஆடவர்கள் தான் தெய்வத்திற்கு பூசனை செய்ய வேண்டும் என்ற நிலையும் இல்லை. எந்தக் குலத்தில் பிறந்தாலும் தகுதியுடையவர்கள் தெய்வத்திற்கு பூசனை செய்யலாம் என்ற நிலையிருந்தது. பெண்களும் பழங்காலத்தில் தெய்வத்திற்குப் பூசனை செய்தனர். இதனைப் பெரிய புராணம் நமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

வேட்டையும் வியக்கதக்க நிகழ்ச்சியும்

திண்ணப்பன் தன்னுடன் காடன், நாணன் ஆகியோருடன் சில வேடர்களையும் அழைத்துக்கொண்டு வேட்டைக்குச் சென்றான். வேட்டையில் விலங்குகளை நாய்கள் துரத்திச் சென்றதைக் கொண்டு விலங்குகளை வீழ்த்தினர். அப்போது கொழுத்த பன்றியொன்று ஓடிவந்தது. திண்ணன் அந்தப் பன்றியை விரட்டினான். நாணனும், காடனும் அவரைத் தொடர்ந்தார்கள். பன்றி பாய்ச்சல் காட்டி ஓடியது. திண்ண்ன் பாய்ந்து ஓடி வாளை உருவி பன்றியைக் கொன்றான். நாணனும் காடனும் திண்ணனை வாழ்த்தினர். அவர்களுக்குப் பசியெடுத்தது. பன்றியை அரிந்து, சுட்டுப் பசியாறி நீர் அருந்தி களைப்பு தீர்ந்ததும் மீண்டும் வேட்டைக்குச் செல்வோம் என்றனர். தண்ணீர் கிடைக்கும் இடத்தையும், பொன்முகலி ஆற்றையும் நாணன் கூற அவர்கள் சென்றார்கள். அங்கே ஒரு குன்றினைக் கண்டார்கள். நாணன் குன்றின் மேல் குடுமித்தேவர் இருக்கிறார் என்று கூற



இருவரும் அதனை நோக்கிச் சென்றனர். குன்றின்மீது செல்லச் செல்ல திண்ணனுக்கு ஒருவித உணர்வு ஏற்பட்டது. உள்ளம் உருகியது. குடுமித்தேவரை (சிவபெருமான்) கண்டவுடன் திண்ணன் நெஞ்சம் மகிழ்ந்து உணர்வொன்றி குடுமித்தேவரைக் கட்டிக் கொண்டு கதறினான். நாணன் அழைத்தும் வரவில்லை. நாணன்திகைத்து திரும்பினான்.

ஆறு நாட்கள்

குடுமித் தேவரைக் கட்டிக்கசிந்த

திண்ணப்பன் குடுமித்தேவருக்கு பசிக்கும் எனக் கருதி பன்றி இறைச்சியை பக்குவப்படுத்தி தேக்கிலையில் வைத்து பொன்முகலி ஆற்று நீரை வாயில் கொண்டு அந்நீரால் அபிசேகம் செய்து இறைச்சியினையும் படைத்தான். இரவு பொழுதில் அவர் தனியாக இருக்கிறார் என எண்ணி வில்லூன்றி காவல் காத்தான்.

சிவபெருமானாகிய குடுமித்தேவருக்கு சிவகோசரியார் என்பவர் பூசனை செய்து வந்தார். அவர் பன்றியிறைச்சியை பார்த்தவுடன் பதைத்து அந்த இடத்தை தூய்மை செய்து பூவும் நீரும் கொண்டு பூசனை செய்தார்.

பகற்பொழுதில் வேட்டைக்கு சென்ற திண்ணன் மீண்டும் குடுமித்தேவரிடம் வந்து பூவும் இலையும் இருப்பதைக் கண்டு தன் காலடியால் சுத்தம் செய்து, மீண்டும் இறைச்சியைப் படைத்தான். இவ்வாறு ஐந்து நாட்கள் கழிந்தன. சிவகோசரியார் இறைச்சிப் படைப்பதைக் கண்டு வருந்தி இறைவனிடம் முறையிட்டார். இறைவன் 'மறைந்து இருந்து பார்' என்று கனவில் சொல்ல. ஆறாம் நாள் காலையில் திண்ணன் இறைச்சியும் பொன்முகலி ஆற்றுத் தண்ணீரும் கொண்டு வரும் போது குடுமித்தேவரின் கண்ணில் இரத்தம் வருவதைக் கண்டு அஞ்சி அயர்ந்து, அங்குமிங்கும் ஓடி மூலிகைகளைப் பிழிந்தான். குருதி நிற்கவில்லை. அம்பால் தன் கண்ணை இடந்து இறைவன் கண்ணில் அப்பினான். குருதி நின்றது. இறைவனுடைய மறு கண்ணிலிருந்து குருதி கொட்டியது. இன்னும் ஒரு கண் என்னிடம் உண்டு என்று கூறி தன் காலால் இறைவனது கண்ணில் மிதித்து தன் கண்ணை அம்பால் இடரத் தொடங்கினான். உடனே இறைவன் ''நில்லு கண்ணப நில்லு'' என்று சொல்லி அவன் கையைப் பிடித்து அருள் காட்சி கொடுத்தார் ஆறாவது நாள் அவன் கையைப் பிடித்து ''என் அன்புடைச் செல்வமே கண்ணப்பா நில்லப்பா என்று கூறி'' என்றும் என் வலப்பக்கத்தில் இருப்பாய் என்று அருள் பாலித்தார். இதனைச் சேக்கிழார்.

பேறினி இதன்மேல் உண்டோ
பிரான்திருக் கண்ணில் வந்த
ஊறுகண் டஞ்சித் தங்கண் இடத்
தப்ப உதவுங் கையை
ஏறுயர்த்தவர் தங்கையால் பிடித்துக்
கொண்(டு) ''என்வலத்தில்
மாறிலாய்! நிற்க''

என்று மன்னு பேர் அருள்புரிந்தார். என்று குறிப்பிடுகிறார்.

கண்ணப்பரின் தனிச்சிறப்பு

கண்ணப்பன் வேடர் குலத்தில் பிறந்தவன். காட்டு மனிதன். அவனுக்கு மந்திரங்களோ மறைகளோ தெரியாது. இறைவனுக்கு இறைச்சியைப் படைத்தவன். வாயில் அபிசேஷக நீரைக் கொண்டு வந்தவன். ஆனாலும் ஆறுநாளில் அவனுக்கு இறைவன் அருள் கிட்டியது. அத்துடன் யாருக்கும் கிடைக்காத பெரும் பேற்றையும் பெற்றான். இறைவனுக்கு வலப்பக்கத்தில் அவன் என்றும்இருக்கும் பாக்கியத்தைப் பெற்றான். நால்வர் பெருமக்களுக்கோ, வேறு நாயன்மார்களுக்கோ (காரைக்கால் அம்மையார் தவிர) இந்தப் பேறு கிடைக்கவில்லை.

பலரும் போற்றினர்

எந்த நாயன்மார்களுக்கும் இல்லாத தனிச் சிறப்பு பிறிதொன்றும் கண்ணப்பருக்கு உண்டு. திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர் ஆகிய பெருமக்கள் எல்லாம் கண்ணப்பரைப் போற்றி வணங்கியிருக்கிறார்கள். மணிவாசகர், திருவாசகத்தில்

''கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என் அப்பன் என் ஒப்புஇல் என்னையும் ஆட்கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணை
கண்ணப் பொன்றீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பி''

என்று போற்றியுள்ளார். நக்கீரர் திருக்கண்ணப்பதேவர் திருமறம் என்ற அற்புதமான நூல் ஒன்றும் செய்துள்ளார். கல்லாட தேவ நாயனார் திருக்கண்ணப்பதேவர் திருமறம் என்ற நூல் ஒன்றும் செய்துள்ளார். நக்கீர தேவநாயனார் அருளிய திருக்கண்ணப்ப தேவர் திருமறம் என்ற நூலில் ***''கண்ணப்பன் செய்யும் செயல்கள் அனைத்தும் எனக்கு உகப்பனவே் அவை யாகம் செய்து அவிப்பலி இடுவதைவிட புனிதமானவை''*** என்று இறைவன் கூறுவதாக உள்ளது அருமையிலும் அருமையாகும். அவை,

''செருப்படி யாவன விருப்புறு துவலே
எழிலவன் வாயது தூயபொற் குடமே
அதனில் தங்குநீர் கங்கையின் புனலே
புனற்கிடு மாமணி யவனிரைப் பல்லே
அதற்கிடு தூமலர் அவனது நாவே
உப்புனல் விடும்பொழுது உரிஞ்சிய மீசைப்
புன்மயிர் குசையினும் நம்மடிக் கினிதே
அவன்தலை தங்கிய சருகிலை தருப்பையில்

பொதிந்த அங்குலி கற்பகத் தலரே
அவனுகந் திட்ட இறைச்சி எனக்குநன்
மாதவர் இட்ட நெய்பால் அவியே''

என்பனவாம். கல்லாட தேவநாயனார் அருளிய திருக்கண்ணப்ப தேவர் திருமறம் என்ற நூலில் கண்ணப்பரின் தோற்றப் பொலிவை, சித்திரம் போல் சித்தரித்துள்ளார்.

''போர்வாழ் போர்த்த தாழகச் செருப்பினன்
குருதி புலராச் சுரிகை யெஃகம்
அரையிற் கட்டிய உடைத்தோற் கச்சையன்
தோல் நெடும்பையில் குருமயிர் திணித்து
வாரில் வீக்கிய வரிக்கை கட்டியன்
உழுவைக் கூனுகிர் கேழல் வெண்மருப்பு
மாறுபடத் தொடுத்த மாலை உத்தரியன்
நீலப் பீலிநெற்றி சூழ்ந்த
கானக்கஞ்சி கவடி புல்லினன்
முருகுநாறு குடிலையாக்கையன்
வேங்கை வென்று வாகைசூடிய
சங்கரன் தன்னிதை தலைவன் ஓங்கிய
வில்லும் அம்பும் நல்லன தாங்கி''

என்பதாம். நவகோடிக்கு நாயகனாக இலங்கி, அத்தனை நலங்களையும் துறந்த பட்டினத்தடிகள்,

''வாளால் மகவரிந்து ஊட்டவல்லேனல்லன் மாது சொன்ன
சூளால் இளமை துறக்க வல்லேனல்லன் தொண்டு செய்து
நாளாறில் கண்ணிடந்து அப்பவல்லே னல்லன் நான் இனிச் சென்று
ஆளாவது எப்படியோ திருக்காளத்தி அப்பருக்கே''

என்று கண்ணப்பரின் அருள்நிலையினை உணர்ந்து கசிகின்றார். கண்ணப்பரின் வடிவே அன்பு வடிவம், அவன் செயலே நமக்கு இனிய செயல். அவன் அறிவெலாம் நம்மை அறியும் அறிவு, அவனது அன்பு, அறிவு, செயல் அனைத்தும் நமக்கு இனியன என்கிறார் இறைவன் என்பதைச் சேக்கிழார்

''அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பு
அவனுடைய அறிவெல்லாம் நம்மை அறியும் அறிவு என்றும்
அவனுடைய செயலெல்லாம் நமக்கினியவா மென்றும்
அவனுடைய நிலையில்வாறு அறிநீஎன்று அருள் செய்வார்''

என்று நலம் பட நவில்கிறார்.

திருவைகாவூர்ப் புராணம்

பொதுவாக சிவராத்திரி புராணக் கதைகளில் தற்செயலாக வேடன் சிவன் அருள் பெற்ற கதை ஒரே மாதிரியாகவே கூறப்பட்டுள்ளது. இதில் கொஞ்சம் மாறுபாடுடைய கதையைக் கூறுவது திருவைகாவூர்த் தலபுராணமாகும்.

இது கும்பகோணத்திற்கு வடமேற்கில் கொள்ளிடக் கரையில் அமைந்த சிவத்தலமாகும். இவ்வூர்த் தலபுராணத்தில் ஐந்தாம் பகுதியில் சிவராத்திரி மகிமையை விளக்கும் கதை இடம்பெற்றுள்ளது.

ஒரு சமயம் வேடன் ஒருவன் ஒரு மானைக் கண்டு வேட்டையாடத் துரத்தி வந்தான். அந்த மான் இவ்வூரில் தவம் செய்து வந்த வன்னியிடம் சரணடைந்தது. அவ்வேடன் வன்னியைக் கொல்ல எத்தனிக்க பக்தர்களைக்காக்கும் சிவபெருமான் ஒரு புலிவடிவம் கொண்டு அவனை ஓட்டினார். அவன் புலி உருவுக்குப் பயந்து ஒரு வில்வமரத்தின் மீதேறி அமர்ந்து கொண்டான். சிவபெருமான் புலிவடிவத்துடன் அம்மரத்தின் கீழே தங்கினார். வேடன் அச்சத்தாலும் புலியை விரட்ட வேண்டும் என்பதற்காகவும் வில்வக் கிளைகளை முறித்து அதன்மீது போட்டுக் கொண்டே இருந்தான். அன்றிரவு முடிந்து விடியும் வரை உண்ணாது உறங்காது இருந்தான். அந்நாள் சிவராத்திரியாதலின் தன்மீது வில்வதளங்களை இட்டு விழித்திருந்த அவனுக்கு சிவபெருமான் மோட்சம் கொடுத்தார்.

இக்கதையை இத்தலபுராணக்கதை இன்னும் விரிவாகச் சொல்கிறது திருவைகாவூர்ப் பெருமானே புலியாக வந்து அருள்பாலித்ததால் அவருக்கு வியாக்ரபுரீசுவரர் என்றும் வேடனுக்கு அருள்புரிந்ததால் வியாதேசுவரர் (வியாதன் - வேடன்) என்றும் பெயர் வழங்குவதாயிற்று.

ஆண்டாள் தமிழை ஆண்டாள்

தி. இராசகோபாலன்

ஆழ்வார்கள் பன்னிருவரில் வில்லிபுத்தூர் உதித்த ஆண்டாள் நாச்சியாருக்கு வைணவத்தில் தனியிடமுண்டு. மற்ற ஆழ்வார்களை எல்லாம் ஆண்டவன் ஆண்டான். ஆனால், ஆண்டாள் நாச்சியார் ஆண்டவனையே ஆண்டாள். அதற்குக்காரணம் ஆண்டாளுடைய சுந்தரத் தமிழிலே அரங்கத்தானே சொக்கிப்போனது தான்! மற்ற ஆழ்வார்கள் இயற்றமிழால் பாடிக் கொடுத்ததை, சூடிக்கொடுத்த சுடர்க்கொடி இன்னிசையால் பாடிக் கொடுத்தாள். அதனால் அதனை *'நற்பாமாலை'* என்றார் உய்யக் கொண்டார்.

ஆழ்வார்கள் பாசுரத்திற்கு அமுதம் என்று பெயர். ஆண் ஆழ்வார்கள் தமிழ்மூலம் அமுதமாக்கினார்கள். ஆனால் ஆண்டாள் தமிழையே அமுதமாக்கினார். எனவேதான் திருக்கண்ணமங்கையாண்டான், **'கோதை தமிழ்'** என்றார். ஆண்டாள் தமிழ், ஆழ்வாராதிகளுக்கு மட்டுமன்றி, அரங்கமூர்த்திக்கும் இனித்ததால், நாச்சியாரே அதனை, 'விருப்புடை இன்தமிழ் மாலை' என வருணித்தார். எல்லா மாதங்களிலும் 'பௌர்ணமி' வருகின்றது என்றாலும், சித்திரையில் வருகின்ற முழு நிலவுக்கு ஒரு தனிமுத்திரை உண்டு. அதுபோல, காலங்கள் தோறும் தமிழ் வளர்ந்தாலும், 'சங்கத் தமிழுக்கு' ஒரு தனியிடம் உண்டு. சங்கத் தமிழுக்குரிய பண்புகள் பல, ஆண்டாள் நாச்சியாரின் பாசுரங்களிலும் அடங்கிக் கிடப்பதால், கோதை தமிழும் **'சங்கத்தமிழ்'** எனச்சாற்றப்படுகிறது.

சங்கத் தமிழுக்குரிய பண்புகளில் ஒன்று, பாடலின் பொருள் பாட்டு முடிவில் நிறைவுறாது, அடிகள் தோறும் அறுபட்டு நின்று பொருள்தருதல். சில பாடல்களில் ஓரடியிலே கூட தொடர்கள் அறுபட்டு நின்று பொருள் தரும். எடுத்துக்காட்டாக, **''யாதும் ஊரே, யாவரும் கேளிர்; தீதும் நன்றும் பிறர்தர வாரா''** எனத் தொடங்கும் பாடலைச் சொல்லலாம். இவ்வாறு தொடர் தொடராகப் பொருள் தந்து செல்லுகின்ற சிங்க நடை, சங்கத் தமிழுக்குச் சொந்தமானது. ஆண்டாள் சங்கத்தமிழிலும் ஆழங்கால் பட்டிருப்பதால், அதன் தாக்கம் நாச்சியார் திருமொழியில் ஆக்கம் பெற்றிருக்கின்றது. **''அற்றவன், மருதம் முறிய நடைகற்றவன்; கஞ்சனை வஞ்சனையிற் செற்றவன்; திகழும் மதுரைப்பதி கொற்றவன் வரில் கூடிடுகூடலே''** (பாசுரம் 5.3.9) எனும் நாச்சியார் திருமொழியை ஓசையோடு ஓதினால் சங்கத்தமிழின் சாயல் தெரியும். கண்ணனாகிய சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து வேரி மயில் பொங்கப் புறப்படுகின்ற காட்சியைப் பாசுரத்தை ஆழ்ந்து கற்றவர்கள் உய்த்துணரலாம்.

சங்கத்தமிழின் சிறப்பிற்கு மற்றொரு காரணம், அதில்மணந்து கொண்டிருக்கும் மண் வாசனை, நாட்டுப்புறவியலின் நாற்றாங்கால் எனச் சங்கத்தமிழைச் சொல்லலாம். பயனைப் பெற்ற பிறகு உதவியவரை உதறிவிடுகின்ற செயலுக்குக் கலித்தொகைப் புலவன், தாகம் தீர்ந்தபிறகு தாங்கியிருந்த தொன்னையைத் தூக்கி எறிகின்ற தொழிலை உவமையாகச் சொல்வான். இந்த மண் வாசனை, மண்ணின் மடியிலே கிடந்த நாச்சியாருக்குக் கைவந்த கலையாயிற்று. கண்ணனைக் கட்டுவிக்கும்படி ஆண்டாள்காமதேவனுக்கு அர்ச்சனை செய்கின்றாள். மனம் மொழி மெய்யால் தொழுகிறாள். என்றாலும் காமதேவன் அருள்புரிவதாகத் தெரியவில்லை. அந்நேரத்தில் ஆண்டாள், ''காமதேவா! என்னுடைய பூசை, வழிபாடுகளை எல்லாம் பெற்ற பின்பு, கண்ணனைக் கட்டுவிக்காமல் கைவிடு வாயானால், அது உழுகின்ற எருதை வேலை வாங்கிப் பின், அது தாங்கிய நுகத்தடியாலேயே தள்ளித் தீனியில்லாமல் அகற்றுவதற்கு ஒப்பாகும்'' என்று பேசுவாள் ''தொழுது முப்போதும் உன்னடி வணங்கி'' எனத் தொடங்கும் பாடலில்,

''அழுது அழுது அலமந்து அம்மா வழங்க,
ஆற்றவும் அது உனக்கு
உறைக்கும் கண்டாய், உழுவதோர்
எருத்தினை நுகங்கொடு
பாய்ந்து ஊட்டம் இன்றித்துரந்தால்
ஒக்குமே''

என அக்கருத்து மிளிர்கிறது. சூடிக்கொடுத்த சுடர்க்கொடி தமது பாடல்களைச் 'சங்கத்தமிழ்' எனச் சாற்றியதன் பொருத்தம் இங்குத் தெற்றெனப் புலனாகிறது.

சங்கத்தமிழுக்குரிய இன்னொரு பண்பு, இயற்கையைச் சித்திரத்தைத் தீட்டுவதற்குரிய திரைச்சீலையாக்கியது. காலங்கள் உருண்டு கொண்டிருந்தாலும், இயற்கையின் ஆட்சியும் மாட்சியும் அன்றிருந்த வண்ணம்தான் இன்றும் இருக்கின்றது. சங்கத்தமிழ் தன்னுடைய அசல் தன்மையிலிருந்து மாறுபடாமல் இருப்பதற்குக் காரணம், இயற்கையாகிய திரைச்சீலையில் அது தீட்டப் பட்டிருப்பதுதான். ஆண்டாளும் இயற்கையைப் பின்புலம் ஆக்குவதில் பெருவெற்றி கண்டிருக்கிறார். பாவை நோன்பை நோற்கும் நாட்டில் செல்வம் கொழிக்கும் என்பதை,

> **''ஓங்கு பெருஞ் செந்நெல்லூடு கயலுளக**
> **பூங்குவளைப் போதில் பொருவண்டு கண்படுப்ப**
> **தேங்காதே புக்கிருந்தது சீர்த்தமுலைபற்றி**
> **வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்''**

எனும் பாசுரத்தின் மூலம் புலப்படுத்துகின்றார். ஆண்டாள் இயற்கையை ஒட்டி வாழ்ந்தவர் மட்டுமன்று, அதனைப் பற்றியும் வாழ்ந்திருக்கின்றார் என்பதை இதன்மூலம் உணரலாம்.

ஆண்டாள் செம்மாந்த நடையில், உயர்தனிச் செம்மொழியை ஆளவும் கற்றவர், பாமர மக்களின் வழக்குத் தமிழையும் கையாளக் கற்றவர், பட்டர்பிரானின் வளர்ப்புப் பெண், சேரி மொழியையும் செவ்விதிற் கிளக்கின்றாள் என்றால், அதுவல்லவா வியப்பு! பாவை நோன்பு நோற்க எழுந்திராது, துயிலும் பெண்ணை எழுப்புவதற்காக, ''கீசு கீசு என்று எங்கும் ஆனைச்சாத்தன் கலந்து பேசின பேச்சரவம் கேட்டிலையோ? பேய்ப் பெண்ணே'' என்று பேசுகிறாள். மேலும், ஆய்ச்சியர், இரண்டு கரங்களாலும் தயிர் கடையும் பொழுது, அவர்கள் மார்பில் அணிந்திருக்கும் அச்சுத்தாலியும் முனைத் தாலியும் கலகல வென்று ஒலிப்பதாகவும் ஆண்டாள் பாடுகின்றார். பட்டர்வீட்டுப் பெண்ணுக்கு ஆய்ச்சியர் வழக்காறு எப்படித் தெரிய வந்தது? தமிழை ஆள்வதில் ஆண்டாள் இமயத்தின் உச்சிக்கும் செல்கிறார். காஷ்மீர் பள்ளத்தாக்கின் ஆழத்திற்கும் செல்கிறார்.

அறிவியல் வாதிகள் உற்றுப்பார்க்கின்ற ஒன்றை, புலவர்கள் ஊடுருவிப்பார்ப்பார்கள் என்பது பொன்மொழி. ஆண்டாள் அறிவியல் பார்வையோடு மானுடத்தை உற்றும் பார்த்திருக்கிறார். புலவர் புத்தியோடு ஊடுருவியும் பார்த்திருக்கிறார் என்பதைத் திருப்பாவையை ஆழ்ந்து கற்றவர்கள் அறிவார்கள். நாமெல்லாம் மறந்துவிட்ட பழைய வழக்காற்றை, ஆண்டாள் நுண்மாண் நுழைபுலத்தோடு எடுத்துரைக்கின்றார். ஆய்ச்சியர்கள் மிகுதியான பாலைக் கறப்பதற்காக, தோல் கன்றைக் கட்டிக் கறப்பார்கள். கிராமங்களில் இன்றும் ஒரு புண்ணாக்குக் கட்டியை நாக்கில் தடவிவிட்டுப் பாலைக் கறந்து விடுகிறார்கள். ஆனால் அன்றைய ஆய்ச்சியர்கள் வெள்ளெனப் பொழுது விடுகின்ற பொழுது, எருமைகளைச் சிறிது நேரம் பசும்புல்லை மேய விட்டுவிட்டு, பின்னர் கறந்தால் **வாங்கக்குடம்** நிறைக்குமாம். இதற்குப் 'பனிப்புல் மேய்தல்' எனப் பெயர். இந்த உண்மை, **''கீழ்வானம் வெள்ளென்று எருமை சிறுவீடு மேய்வான் பரந்தன காண்''** என ஆண்டாள் பாடுவதால், இன்றைய சமுதாயத்திற்குத் தெரிய வருகிறது. அன்றெனில் இந்த வழக்காறு அடியற்றுப் போனதுபோல், ஒரு காலத்தில் இந்த வழக்கம் இருந்தது என்ற உண்மையும் இன்று

தெரியாமல் போயிருக்கும். **''வெள்ளத்து அரவில் துயிலமர்ந்த வித்தினை, உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்''** என வேத விழுப்பொருளை எடுத்துப் பேசுகின்ற நாச்சியார், நாட்டார் வழக்காற்றையும் தொடுத்துப் பேசுவது, தமிழை ஆளும் திறமல்லவா?

கவிதையின் வெற்றி அது எந்தப் பொருளைப் பேசுகின்றது என்பதை மட்டும் பொறுத்ததன்று, அது எப்படிப் பேசுகிறது என்பதையும் பொறுத்ததாகும், **'கண்டனன் கற்பினுக்கு அணியைக் கண்களால்'** எனும் கம்பனடி இன்று வரை பாராட்டப்படுவதற்குக் காரணம், அது சொல்லப்பட்ட முறைமையினால்தான்! ஆண்டாளுக்கு ஒரு செய்தியை எடுத்து மொழியும் திறம், கைவந்த கலையாம். **''நாமம் ஆயிரம் ஏத்த நின்ற நாராயணா! நரனே! உன்னை மாமி தன் மகனாகப் பெற்றால், எமக்கு வாதை தவிருமே''** எனும் நாச்சியார் திருமொழி நவில் தொறும் நயம் பயக்கக்கூடியதாகும்.

'எனக்கு உடனடியாகத் திருமணம் நடக்க வேண்டும், இவன்தான் கணவனாக வரவேண்டும்' என வாய்விட்டுக் கேட்டல், இந்நாட்டுப் பெண்களிடம் இல்லாத வழக்கு. வயது வந்த பெண்கள் வாய்விட்டுக் கேட்பதில்லையே தவிர, குறிப்பால் உணர்த்துதல் உண்டு. தன்னை ஆய்ச்சியாக மாற்றிக்கொண்ட நாச்சியார், நயமாகவும் குறிப்பாகவும் உணர்த்துகிறார், தனக்குக் கண்ணனே வேண்டும் என்று. 'தேவகியின் மைந்தன் கண்ணன் யசோதையின் மகனாக வந்தால், என்னுடைய துன்பம் தீரும்' என்று பாடுகிறார் ஆண்டாள். தனக்குக் கண்ணன் கணவனாக வர வேண்டும் என்று கேட்பது இந்நாட்டு மரபில்லை என்பதால், தன்னுடைய மாமியாகிய யசோதைக்குக் கண்ணன் மகனாக வரவேண்டும் என்கிறாள். மாமிக்கு மகன் என்றால் இவளுக்கு மாப்பிள்ளை என்று தானே பொருள். அப்பொழுது துன்பம் தீரத்தானே செய்யும்! நாச்சியார் இலாவகமாக தமிழக மரபைக் காப்பாற்றுவதோடு நயமாகத் தமிழைக் கையாளவும் கற்றிருக்கிறார் என்பது தானே உண்மை!

அன்றொரு பாட்டி **'சங்கத்தமிழ் மூன்றும் தா'** என்று விநாயகனை வேண்டினாள். ஆனால், ஆண்டாள் நாச்சியார் தானே சங்கத்தமிழை வேண்டுபவர்களுக்கு வழங்குகிறார். **'சங்கத்தமிழ் மாலை முப்பதும்'** என்பது அவரது வாக்குமூலம். ஆண்டாள் பாசுரங்களில் தமிழ் ஊடாடி நிற்பதால், 'தூய தமிழ் ஈரைந்தும், செந்தமிழ் பத்தும் வல்லார்' போன்ற தொடர்கள் அவராலேயே அடிக்கடி கையாளப்படுகின்றன. நாச்சியார் தமிழுக்குப்பல அம்சங்கள் கட்டியங் கூறினாலும், அவருடைய சொல்லாட்சி அதி அற்புதமானதாகும். **'கூற்றத்தின் வாய் வீழ்ந்த கும்பகருணா', தரிக்கிலானாகி, கஞ்சன் வயிற்றில் நெருப்பென்ன நின்ற நெடுமாலே,** என்பன போன்ற தொடர்கள் அவரது சொல்லாட்சிக்குச் சான்றுகளாகும். தம்முடைய சொற்கள், பேசும் பொற்சித்திரங்கள் என்பதை நன்குணர்ந்த நாச்சியார், **''வில்லைத் தொலைத்த புருவத்தாள் உற்று மிக விரும்பும் சொல்லைத் துதிக்க வல்லார்கள், துன்பக்கடலுள் துவளாரே''** என அருளிப்போந்தார்.

★★★★

இம்மாதப் பாராயணப் பாசுரம்

தீயிற் பொலிகின்றசெஞ்சுடராழி திகழ்திருச் சக்கரத்தின்
கோயிற் பொறியாலே யொற்றுண்டு நின்று குடிகுடியாட் செய்கின்றோம்
மாயப் பொருபடை வாணனை ஆயிரந் தோளும் பொழி குருதி
பாய சுழற்றிய வாழி வல்லானுக்குப் பல்லாண்டு கூறுதுமே

பெரியாழ்வர் திருமொழி - திருப்பல்லாண்டு

அருள்மிகு மூங்கிலணை காமாட்சி அம்மன்

தேவதானப்பட்டி



அருள்பொழிந்து மக்களுக்கு அபயமளித்து வரும் தெய்வங்களில் முதல் தெய்வமாக விளங்கும் ஆதிபராசக்தியின் மறுஅவதாரமாக விளங்கி வருவது காமாட்சி அம்மனாகும்.

காஞ்சிபுரம் காமாட்சி அம்மனுக்கு அடுத்தபடியாக தேவதானப்பட்டி மூங்கிலணைக் காமாட்சி அம்மன்தான் பிரசித்தி பெற்ற தெய்வமாகும். அதற்குக் காரணம் காஞ்சி காமாட்சியே மூங்கிலணைக்காமாட்சி அம்மனாக இருந்து வருகிறாள்.

அமைவிடம்

தமிழ்நாட்டின் தென்மேற்கில் தற்போதைய தேனி மாவட்டம் பெரியகுளம் வட்டத்தில் தேவதானபட்டியிலிருந்து வடக்கே நான்கு கல்தொலைவில் பசுமை சூழ்ந்த மேற்கு தொடர்ச்சி மலையாம் கொடைக்கானல் மலையின் அடிவாரத்தில் மஞ்ளார் நதியின் தென்கரையில் சுற்றிலும் பசுமையான காடுகளும் மலைகளும், குன்றுகளும் வயல் வெளிகளும் சூழ்ந்த ரம்மியமான சூழலில் அன்னையின் திருக்கோயில் அமைந்துள்ளது.

ஸ்தல வரலாறு

ஊருக்கு வடக்கே உள்ள பகுதி காஞ்சனா ஆரணியப்பகுதியாக இருந்து வந்தது. அப்பகுதியில் வங்கிசபுரி நகரம் என்ற ஒரு நகரம் இருந்தது.

அசுரன் ஆண்டதும் அம்மன் வந்ததும்

வங்கிசபுரி நகரத்திற்கு சூலபாணி என்னும் அசுரன் மன்னனாக ஆண்டு வந்தான். இவன் சிவபெருமானை நோக்கி கடுமையான தவம் புரிந்து அரிய வரங்கள் அநேகம் பெற்றிருந்தான். அத்தவத்தின் பலனாக அவனுக்கு ஒரு மகன் பிறந்தான். பெயர் வச்சிரதந்தன்.

சூலபாணிக்குப்பின் வங்கிசபுரிக்கு வச்சிரதந்தன் அரசனான். மாங்குசானன் என்பவன் அமைச்சனாகவும், துட்டபுத்தி என்பவன் தளபதியாகவும் இருந்தனர். இவர்கள் இருவரின் ஆலோசனைப்படி அசுரன் மிகவும் கொடுங்கோலனாக மாறி, மக்களை தவசிரேஷ்டர்களை, வேத விற்பன்னர்களை அளவற்ற கொடுமைப்படுத்தி வந்தான். தவ வலிமையால் பிறந்த சக்தியைப் பெற்றிருந்ததனால் யாராலும் ஒன்றும் செய்ய முடியவில்லை. அனைவரும் அல்லற்பட்டுத் துடித்தனர். இவனது கொடுமைதாங்காது பிரம்ம தேவரிடம் சென்று முறையிட, அவரும் தேவேந்திரனை அனுப்பி வைத்தார்.

பிரம்மதேவர் ஆணைப்படி வங்கிசபுரி நகரம் சென்ற தேவேந்திரனை தளபதி துட்டபுத்தி தனது படையுடன் எதிர்த்தான். போர்க்களத்தில் துட்டபுத்தியோடு எதிர்த்து நிற்க முடியாமல் தேவேந்திரன் தனது

வஜ்ராயுதப் படையும் வெள்ளையானையும் இழந்து போர்க்களம் விட்டு ஓடினான். தேவேந்திரனும் மற்ற தேவர்களும் வச்சிரதந்தனை பராசக்தி தான் அழிக்க முடியுமென்று தெளிந்து பராசக்தி காமாட்சி அம்மனாக எழுந்தருளியிருக்கும் காஞ்சிபுரம் சென்று அன்னையை வேண்டினார்கள்.

அம்மன் எழுந்தருளல்

அனைவரின் வேண்டுகோளையும் ஏற்று அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்ட அன்னை காமாட்சி வாஞ்சையோடு வீற்றிருந்த காஞ்சிபுரம் விட்டு, சிலம்போசை ஜெகமெல்லாம் எதிரொலிக்க திருப்பாதச்சீரடி எடுத்து வைத்துப்புறப்பட்டாள். வங்கிசபுரி வரும் வழியில் பன்றிமலை என்ற வராக மலையில் பாளையம் இறங்கி, துர்க்கையை அழைத்து வச்சிரதந்தனுடன் போரிட அனுப்பி வைத்தாள்.

துர்க்கை போரிடல்

துர்க்காதேவி அங்கிருந்து புறப்பட்டு வங்கிசபுரி வந்து வச்சிரதந்தனோடு யுத்தம் செய்து அவன் தலையைத் துண்டித்தாள். சிங்கத்தலையோடு அசுரன் நின்றான். அத்தலையைத் துண்டிக்கவே புலித்தலை பெற்றுத் தோன்றினான். பின்னும்அறுபட, அறுபட கரடி, காட்டெருமை முதலான பல உருவங்கள் பெற்றுப் போரிட்டான். துர்க்கா தேவியும் போரிட்டு ஓய்ந்தாள். இவ்வரக்கனை சம்காரம் செய்ய காமாட்சி அம்மனாலேயே முடியும் என்று உணர்ந்த துர்க்கை, அன்னையிடம் சென்று முறையிட்டாள். அதன்படி வச்சிரதந்தனோடு போர்புரிய அண்டத்தைக் காத்து வரும் அன்னை காமாட்சியே திக்கெட்டும் ஒளி மழை பொழிய அண்டசராசரம் நடுங்க மலர்ப்பாதங்கள் எடுத்து வைத்துப் புறப்பட்டாள்.

அம்மன் போரிடல்

கொடுமைக்கு ஆளானவர்களைச் சுமந்த துன்பம் நீங்கப் போகிற மகிழ்ச்சியால் வங்கிசபுரிமண் சீரான தோற்றத்தோடு இறுமாந்து காட்சி அளித்தது. ஆங்காரத் தோற்றமுடன் அன்னை போர்க் கோலம் பூண்டு வங்கிசபுரி வந்தாள். உலக மாதாவோடு போர்புரிய வந்த வச்சிரதந்தன் ஏவிய ஆயுதம் மூன்று முறை தேவியை வலம் வந்து மீண்டும் அவனிடமே சென்றது. இதைக்கண்ட அசுரன் தன் இறுதியை உணர்ந்தான். அதன்பின் அம்மனை வணங்கித் தோத்திரம் செய்த பின்பே போரிடலானான். முன்போலவே பல தலைகள் எடுத்துப் போரிட்டான். இதையறிந்த அம்மன் உடனே துர்க்கையை அழைத்து அசுரனது தலை கீழே விழுந்தவுடன் காலால் மிதித்து அழுத்திடக் கூறி தலையைத் துண்டித்தாள். உடனே துர்க்கை கீழே விழுந்த அசுரனின் தலையை மிதிக்க அது சிதறியது. மறுதலை எடுக்க முடியாமல் வச்சிரதந்தன் மாண்டான். தேவர்கள் பூமாரி பொழிந்தனர்.

அசுரனது தலையை துர்க்கை மிதித்த இடமே தலையாறு எனவும், மூளை சிதறிப் போய் விழுந்த இடமே மூளையாறு எனவும், குலைக்காய் ஈரல் விழுந்த இடமே குலையூத்து எனவும், உடல் குறுக்காக விழுந்த இடமே குறுக்குமலை எனவும் இன்றும் வழங்கி வருகிறது. குறுக்குமலை என்பது கொடைக்கானல் மலைப்பாதை ஆரம்பமாகும் மலையாகும்.

மஞ்சளாற்றின் தோற்றம்

வங்கிசபுரி நகரின் அருகிலிருந்த நதிக்கு வேகவதீ என்ற பெயர் வழங்கி வந்தது. மாணிக்கமலைத் தொடரிலுள்ள தலையாற்றில் மூங்கிற்காடுகளுக்கிடையே பாய்ந்து வரும் நதி. அசுரனைக் கொன்ற அன்னை யௌவன வடிவங் கொண்டு இந்நதி அருகே தவமிருந்தாள்.

அசுரனைக் கொன்ற பாவம் அம்மனுக்கு நீங்குவதற்காக, சப்த கன்னியர்கள், தெய்வப் பெண்கள், துர்க்கை அனைவரும் சேர்ந்து தங்கக் குடங்களில் நீரெடுத்து, வாசனை தங்கிய சகல சத்துக்களையும் சேர்த்து, நறுமஞ்சளைக் கலக்கி அபிசேகம் செய்தனர். கன்னித் தெய்வமாய் பொலிவுறும் காமாட்சி அம்மனுக்கு அபிசேகம் செய்த மஞ்சள் நீர் சென்று ஆற்றில் கலந்ததால், அதுவரை வேகவதீ நதி என்று இருந்தது அன்று முதல் மஞ்சளாறு என்னும் மகிமை பெற்ற புண்ணிய நதியாக பெயர்பெற்றது.

வச்சிரதந்தனை வதைத்து தர்மத்தை நிலைநாட்டிய தேவி, சாந்திவேண்டி யௌவன வடிவெடுத்து தலையாற்றில் உள்ள மூங்கிற்புதரில் தவமிருந்தாள். அம்மன் தவமிருந்த திருவிடத்தில் பின்னர் சிறிய கோவிலொன்று கட்டப்பட்டது. அது ''அம்மா மச்சு'' என்று இன்றும் அழைக்கப்பட்டு வருகிறது. இது தேவதானப் பட்டியிலிருந்து சுமார் ஐந்து மைல் தூரத்தில் தலையாறு நீர் வீழ்ச்சியின் அருகில் உள்ளது.

பின்னர் வங்கிசபுரி என்ற தெய்வதானப்பதி இராஜ கம்பள நாயக்கர் இனத்தவரான பூசாரி நாயக்கர் என்ற ஜமீன்தாரின் ஆட்சியின் கீழிருந்தது. ஜமீனைச் சேர்ந்த மாடுகளை மேய்க்க தினசரி ஒருவன் ஓட்டிச் செல்வான். அவன் மேய்க்கச் செல்லும் போது, ஓட்டிச் செல்லும் மாடுகளில் ஒன்றான ஈனாத காராம்பசுவானது, தினமும் மந்தையை விட்டுப் பிரிந்து சென்று மாலையில் தான் திரும்பிவரும். இதைக்கண்ட மாடு மேய்ப்பவன், அந்த ஒரு பசுமட்டும் எங்கே செல்கிறது? எதற்குச் செல்கிறது? என்று அறிய ஆவல் உள்ளவனாய், ஒருநாள் அப்பசு செல்லும் வழியைப் பின் தொடர்ந்தார்.

மூங்கிற்புதரொன்றில் யௌவன வடிவமான தேஜஸ் பொருந்திய ஒரு பெண் அப்பசுவில் பாலருந்துவதைக் கண்டான். அவன் கண்டது சாதாரணப் பெண் அல்ல. உலகிற்கு ஆதாரமாய் விளங்கும் ஒப்பற்ற நாயகியாம், கருணைமுகிலாய் நின்று காக்கும் கன்னித் தெய்வமாம் காமாட்சி அம்மன் தான்! ஒளிப்பிழம்பாய் விளங்கும் அன்னையை மாடு மேய்ப்பவன் பார்த்தவுடனேயே தேஜஸ் பொறுக்காமல் கண்கள் குருடாகி விட்டன. உடனே அலறி அடித்துக் கொண்டு ஜமீன்தாரிடம் சென்று நடந்ததைக் கூறினான். தெய்வ குற்றமாக இருக்குமென்று கருதிய ஜமீன்தார் பூஜையிட்டு வழிபட்டார். அம்மன் அசரீரியாக, ''முன்னர் வச்சிரதந்தன் என்ற அசூரனை வதைத்த சாந்திக்காக தவமிருக்கும் என்னைக்கண்டு தேஜஸ் தாங்காமல் கண்களை இழந்தான். இன்னும் ஒரு வாரத்தில் பெரும் மழை பெய்து ஆற்றில் வெள்ளம் வரும். அந்த வெள்ளத்தின் மீது மிதந்து வரும் மூங்கிற் பெட்டியில் நான் அமர்ந்து வருவேன். ஒரு இடத்தில் மூங்கிற்புதர் அணையிட்டு பெட்டியை நிறுத்தும், பெட்டியை எடுத்து வைத்து வழிபட்டால் கண்கள் தெரியும் கன்னித் தெய்வமான என்னருகில் இல்லறத்தார் குடியிருக்கக் கூடாது. நெய்விளக்கு தவிர வேறு விளக்கு வேண்டாம். தேங்காயும், பழமும் நிவேதித்தால் போதும். அன்ன நிவேத்தியம் வேண்டாம்'' என்று கூறியது.

மூங்கிலணைக் காமாட்சி

அம்மனின் வாக்குப்படியே ஒரு வாரத்தில் பெரும் மழைபெய்து ஆற்றில் வெள்ளம் வந்தது. ஜமீன்தாரும் தெய்வதானப்பதி மக்களும் மஞ்சளாற்றின் கரையில் காத்திருந்தனர். பூச்சுமந்து, புலவர்கள், பாச்சுமந்து, புண்ணியத்தின் நன்னீராய் புகழ்சுமக்கும் நீரலைகள், வண்ணத் திருவுருவாய் வார்த்தெடுத்த சித்திரமாய், மண்ணின் மைந்தர்களை காத்து வரும் மகாசக்தியைச் சுமந்து வரும் பாங்கொளிரும் மூங்கிற்பெட்டியைச் சுமந்து கொண்டு வந்தது. பெட்டியைக் கண்டவுடன் பேரானந்தம் கொண்டனர். உணர்ச்சிப் பெருக்கினால் உள்ளமெல்லாம் நெக்குருக. ஆரவாரம் செய்து கொண்டு ஆடி, ஓடி வந்தார்கள். மிதந்து வந்த மூங்கிற் பெட்டியை மூங்கிற்புதர் அணையிட்டு நிறுத்தியது. மூங்கில் அணையிட்டு நிறுத்தியதால் மூங்கிலணைக் காமாட்சி என்று அன்று முதல் வழங்கி வருகிறது.

உடையாத தேங்காய்

கண்கள் குருடான மாடு மேய்த்தவனை அனுப்பி பெட்டியைக் கையிலெடுக்கச் சொன்னார்கள். கையால் பெட்டியை எடுக்கவும் அவன் கண்கள் தெரிந்தன. காக்கும் தெய்வமாம் காமாட்சி அம்மனின் சக்தியைக் கண்ட மக்கள் பக்திப் பரவசத்தால் புலகாங்கிதம் அடைந்தார்கள் அம்மன் அருளை நேரடியாகக் கண்ட ஆனந்தத்தில், தேங்காய், பழம், சூடம், பத்தி வைத்து அவசர அவசரமாக பூஜை செய்தார்கள். தேங்காய் உடைக்காமல், வாழைப்பழம் உரிக்காமல், பூஜை செய்ததை பின்னரே உணர்ந்தார்கள். ஈனாத காரம்பசுவில் பாலருந்திய அம்மன், உடையாத தேங்காயும், உரிக்காத வாழைப்பழமுமே விரும்புகிறாள் போலும்

என்று தெளிந்தனர். அன்று முதல் அம்மனுக்கு நிவேத்தியம் செய்யப்படும் தேங்காய் உடைக்கப்படுவதில்லை. பழம் உரிக்கப்படுவதில்லை. பூஜை செய்த பின்னரே தேங்காய் உடைக்கப்படும். இம்முறை வேறு எந்தக் கோவிலிலும் இல்லாத அதிசயமாகும். மேலும் அன்ன நிவேத்தியமே இக்கோவிலில் கிடையாது.

நெய்விளக்கு, நெய்ப்பானை

ஊரும் தற்போதுள்ள இடத்திற்கு கோவிலுக்கு சுமார்1 1/2 மைல் தூரத்தில் மாற்றப்பட்டது. நெய்விளக்கு தவிர வேறு விளக்கு போடப்படுவதில்லை. அந்த நெய்யும் பக்தர்களால் உபயமாக வந்து விடுகிறது. நெய் வாங்கி ஊற்றுதல் நேர்த்திக்கடன்களில் ஒன்றாக இருந்து வருகிறது. திருவிழாவின் போது சுமார் ஐம்பது பெரும் மண்பானைகள் கோவில் நெய் மண்டபத்தில், வைக்கப்படும் பக்தர்கள் கொண்டு வரும் உபயநெய்யே ஆண்டு முழுவதும் விளக்கேற்றப் பயன்படுகிறது. ஆண்டு முழுவதும் நெய் மண்டபத்திலோ, வெளியிடங்களிலோ வைக்கப்படும் கோவில் நெய்யில் ஒரு ஈயோ, எறும்போ மொய்க்காதது அதிசயமான காட்சியாகும். இது அம்மன் மகிமைக்கு ஒரு சாட்சியாகும்.

அடைத்த கதவிற்குப் பூஜை

கோவில் பூஜை மலை மேல் குடியிருக்கும் மன்னாடியார்கள் வசம் ஒப்புவிக்கப்பட்டது. பூஜை செய்து வந்த மன்னாடியாருக்கும், ஜமீன் தாருக்கும் சொந்த சொத்துக்களுக்கு தண்ணீர் பாய்ச்சுவதில் தகராறு ஏற்பட்டது. அதனால் மன்னாடியார் கோபித்துக் கொண்டு கோவில் கதவை, அதாவது இப்போதுள்ள பூஜை மண்டபத்து உட்கதவைப் பூட்டிவிட்டு, ''நான் அடைத்த கதவு என்றும் திறக்கக் கூடாது'' என்று சொல்லிவிட்டுச் சென்றதாகவும், அன்று பூட்டிய கதவு இன்றும் திறக்கப்படாமல் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. அன்று முதல் அடைத்த கதவிற்குப் பூஜை செய்யப்பட்டு வருகிறது அதன் பிறகு தான், அடைத்த கதவருகில் நாகபீடம் அமைக்கப்பட்டுள்ளது.

காமக்காள் திவசம்

பூசாரி நாயக்கர் பரம்பரையில் வந்த கடைசி ஜமீன்தார் மனைவி காமக்காள் என்னும் அம்மையார் தனது ஒரே மகனான பொம்முலிங்கசாமி என்ற மகனுடன் கோவிலுக்குள் தற்போது, காமக்காள் அரண்மனை என வழங்கும் கட்டிடத்தில் வாழ்ந்து, அம்மன் தொண்டாற்றி வந்தாள். காமக்காள் தனது பக்திவலிமையால் அம்மனுடன் நேரில் பேசும் பேறு பெற்றாள். இரவில் தன் தாயார் தனியாகச் சென்று வருவதில் ஐயங்கொண்ட மகன் தாயைக் கோபிக்க, அம்மையார் உண்மையை கூறியும் நம்பாதவன், தானும் அம்மனைக்காண வேண்டுமென பிடிவாதம் செய்தான். அன்றிரவே காமாக்காள் தன் மகனை அழைத்துச் சென்றாள். உலக அன்னையைக் கண்ட காமக்காள் மகன் மண்டை சிதறி மடிந்தான்.

பூதலத்தை ஆளும் பொற்சுடராய் விளங்கும் அம்மனிடம் காமக்காள், ''எனக்குத்திவசமிட ஒரு மகன் தானே இருந்தான். அவனையும் எடுத்துக் கொண்டாயே இனி எனக்கு இறந்த பிறகு யார் திவசமிடுவார்?'' என்று வருந்திக் கேட்டாள். பக்தர்கள் வேண்டுகோளை நிறைவேற்றும் சித்துபல செய்யும் சக்தி, ''வருந்தாதே! நீஇறந்தபின் நாயக்கமாரைக் கொண்டு உனக்குத் திவசமிடச் செய்கிறேன்'' என அபயமளித்தாள். காமக்காள் தைமாதம் இரத சப்தமியில் மரணம் அடைந்தாள். அன்னையின் வாக்குப்படி இர்ராஜ கம்பள நாயக்கமார் திவசமிட்டனர். காமக்காள், மகன் ஆகிய இருவரது சமாதிகளும் கோவிலுக்குக் கிழக்கே ஒரு பர்லாங் தூரத்தில் உள்ளன.

மகாசிவராத்திரி திருவிழா

காமக்காள் மறைந்த அடுத்த ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் இரதசப்தமியில், இத்திருக்கோயிலில் காமக்காளுக்கு திவசம் கொடுக்கப்படுகிறது.

திவசம் முடிந்தஅப்பொழுதே அருள்மிகு மூங்கிலணை காமாட்சியம்மன் மாசி சிவராத்திரி திருவிழாவிற்கு முகூர்த்தக்கால் நாட்டப்படுகிறது.

மகாசிவராத்திரி நாளை முதல் திருநாளாக் கொண்டு ஐந்து நாட்கள் திருவிழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. மகா சிவராத்திரி நாளிலிருந்து எட்டாம் திருநாள் மறுபள்ளயம் பூஜையாகக் கொண்டாடப்பெறுகிறது.

திருவிழா மகாசிவராத்திரி நாளிலிருந்து ஐந்து நாட்கள் நடைபெறும் என்றாலும், மறு பூஜை வரை எட்டு நாட்களும் அன்னையை தரிசனம் செய்து பயன்பெற பக்தர்கள் கூட்டம் அலைமோதும்.

மகாசிவராத்திரி திருவிழா ஐந்து நாட்களில் முதல் நான்கு நாட்கள் பள்ளயம், அருள்மிகு படித்துறை விநாயகர் சன்னதி முன்பாக மஞ்சளாற்றிலிருந்து தேவராட்டத்துடன் புறப்பட்டு திருக்கோயில் வந்தடைந்து, கோலாகலமாக அன்னை அருள்மிகு மூங்கிலணை காமாட்சியம்மனுக்கு பூஜை நடைபெறும். தேவராட்டத்துடன் பள்ளயம் புறப்பட்டு வருவதையும் அன்னைக்கு நடைபெறும் பள்ளய பூஜையையும் காண்போர் பக்திப் பரவசத்தால் மெய்சிலிர்த்து உள்ளம் பூரித்து மெய்மறப்பர்.

மாசி மகா சிவராத்திரி ஐந்தாம் திருநாளன்று பள்ளயம் காமக்காள் சன்னதியிலிருந்து புறப்பட்டு அருள்மிகு மூங்கிலணை காமாட்சியம்மன் சன்னதியில் தீபாராதனை ஆகி தேவதானப்பட்டியிலுள்ள இராஜ கம்பளத்து நாயக்கர்அரண்மனைவந்தடையும்.

பின்னர் மறுபூஜையன்றும் பள்ளயம், அருள்மிகு படித்துறை விநாயகர் சன்னதி முன்பாக மஞ்சளாற்றிலிருந்து புறப்பாடாகி, திருக்கோயில் வந்தடைந்து அன்னைக்கு பள்ளய பூஜை நடைபெறும். இம்முறையில் நடைபெறும் திருவிழாவினை வேறு எங்கும் காண இயலாது.

அருள்மிகு மூங்கிலணை காமாட்சியம்மனின் மாசி மகா சிவராத்திரி திருவிழாவின் ஒவ்வொரு நாளும் பெருந்திரளான பக்தர்கள் கூடுவர்.

அன்னையின் திருவிழாவிற்கு, பக்தர்கள் வருவதற்காக மதுரை, திண்டுக்கல், வத்தலக்குண்டு, பெரியகுளம், தேனி, கம்பம் போன்ற ஊர்களிலிருந்து அரசு போக்குவரத்துக் கழகத்திலிருந்து சிறப்புப் பேருந்துகள் இயக்கப் பெறுகின்றன.

கௌளிக்குறி சொல்லும் அதிசயம்

இக்கோயிலின் பூஜை மண்டபத்தின் மேலே கௌளி சின்னம் பொறிக்கப்பட்டிருக்கிறது. இதே போல் காஞ்சிபுரத்திலுள்ள காமாட்சி அம்மன் கோவில் பூசைமண்டபத்தின் மேலேயும் கௌளி சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது, அங்கேயும் கௌளிக்குறி கேட்டல் முக்கியமாகக் கருதப்பட்டு வருகிறது.

அதேபோல் இக்கோவிலிலும் அநேக பக்தர்கள் அடிக்கடி குறிகேட்டுச் செல்லுகின்றனர். இது தொடர்ந்து நடைபெற்று வரும் ஒரு நிகழ்ச்சியாகும்.

அம்மனின் அருள் மகிமை

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும், குறிப்பாக தென்மாவட்டங்களில் அருள்மிகு அம்மனைக் குலதெய்வமாகக் கொண்டு வழிபட்டு வருகிறார்கள். பிள்ளையில்லாதவர்களுக்கு பிள்ளைவரம் கொடுத்தல், தொழில் முன்னேற்றம், உத்தியோக உயர்வு, நோய் தீர்ந்து குணமடைதல், திருமணமாகாதவர்களுக்கு திருமணம் நடத்தி வைத்தல், வருமானம் உயருதல் முதலியன அம்மன் அருளால் ஏராளமாக நடைபெற்றிருக்கின்றன. நல்ல காரியமாக செல்பவர்கள் அம்மனுக்கு அபிசேகம் செய்து, நெய்யூற்றி, மனமுருகி வேண்டிச் சென்றால் கண்டிப்பாக அக்காரியங்கள் சித்தியாகி வருகின்றன. வெள்ளிக்கிழமைதோறும் அதிகாலையில் நீராடி விட்டு அம்மனிடம் உருக்கமாக வேண்டிக் கொண்டவர்களுக்கு வேண்டியது கிடைக்கும்.

★ ★ ★

சிவராத்திரி புராண சிற்பங்கள்

சிவராத்திரி பலன் பெற்ற வேடன் கதையை அபூர்வமாகவே சிற்பங்களாகச் செய்துள்ளனர். வேலூர் கோட்டையில் உள்ள ஜலகண்டேசுவரர் ஆலய கல்யாண மண்டபத்தூண் ஒன்றிலும், கோவை மாவட்டம் பெருமாள் நல்லூர் சிவாலயத்தில் உள்ள தூணிலும் புடைப்புச் சிற்பமாக செதுக்கப்பட்டுள்ளது.

இவற்றில் மரம், மரத்தின் மீது வேடன், அம்மரத்தின் கீழ் புலியும் சிவலிங்கமும் காட்டப்பட்டுள்ளது.

வேலும் மயிலும் துணை

கந்தர் அனுபூதி - தொடர்ச்சி

(பேராசிரியர். டாக்டர் சரஸ்வதி இராமநாதன்)

அருணகிரிநாதர் என்ன வேண்டினார்? அவருடைய நூலில் நான் கடைசியில் இருந்து வருகிறேன். அதாவது

''உருவாய், அருவாய், உளதாய், இலதாய்,
மருவாய், மலராய், மணியாய், ஒளியாய்,
கருவாய், உயிராய், கதியாய், விதியாய்,
குருவாய், வருவாய், அருள்வாய் குகனே''

அது தான் கடைசிப்பாடல். என்றைக்கோ அருணகிரிநாதர் கேட்டார். அது இன்று பலித்துவிட்டது, எல்லோருடைய மனதில் இருக்கின்ற தெய்வம் குருவடிவாகி நடமாடும் தெய்வமாக இன்று நம் மனதோடு உலவுகிறது. அருவமாய் இருக்கின்ற முருகனே உருவமாய் வரவேண்டும் என்பது வேண்டுகோள். வறுமை, தரித்திரம் என்ற பாவி வந்து விட்டால், நீவந்து காப்பாற்று என்கிறார் அருணகிரி. வறுமை என்கிற பாவி வந்தால் எல்லாவற்றையும் அழித்துவிடும். செல்வத்தை, இன்பத்தை, அழகை, குணத்தை நல்லமனத்தை எல்லாவற்றையும் அழித்துவிடும். ''இன்மையின் இன்மையே இன்னாதது'' வறுமைபோக, வளமான வாழ்வு பெற முருகன் இடத்தில் வழிப்படுத்துவது அனுபூதி.

உருவம் இல்லாமல் இருக்கிற முருகப் பெருமானே நீஎன் முன்னால் குருவாய் வரவேண்டும் என்பதே வேண்டுகோள். என் மகள் கல்யாணத்தை ஒட்டி ஒரு ஐந்து அடுக்கு பாத்திரத்தை என் தம்பி மனைவி வாங்கிவந்தாள், என் மகள் சிறிய அடுக்கினுள் ஒரு பெரிய அடுக்கை எடுத்து வைக்க வந்தாள். ''பெரிய அடுக்கினுள் தான் சிறிய அடுக்கு போகும். சிறிய அடுக்கினுள் பெரிய அடுக்கு போகாது. மரக்காலினுள் படிபோகும், படியினுள் மரக்கால் போகுமா?'' என்றேன்.

இந்த உடம்பு சிறியது. உடம்பை விட மனது பெரியது. மனதைவிட அறிவு பெரியது. இந்த அறிவிற்கு அறிவாய் இருக்கின்ற ஆண்டவன் இதைவிடப் பெரியவன் இத்தகைய மிகப் பெரிய ஆண்டவன் மிகச் சிறிய மனதினுள் இருக்கிறான். இதற்கு 'பிரம்மம்' என்று பெயர். ''மற்றை நம்காமங்கள்மாற்று'' என்று வேண்டினால் அவனைக் காணலாம். கண்ணால் பார்க்கிறது ஓரளவுதான். காதால் கேட்பது ஓரளவுதான். நாக்கால் பேசுவதும் ஓரளவுதான். எல்லாவற்றிற்கும் ஒரு ''உறைவு நிலை'' உண்டு. நாக்கால் சுவைப்பதும் ஓரளவுதான். இத்தனையும் சிற்றின்பம்தான். இதெல்லாம் ஒரு அரை மணி நேரத்திற்கு மேல் நீடிக்காது. ஆகவே இந்தச் சிற்றின்பம் எல்லாவற்றையும் விட்டுவிடவேண்டும் என்றால் அருவமாய் இருக்கிற முருகபெருமானே நீஉருவமாய், குருவாய், வந்திடவேண்டும். குருவாய் வருவதே அருள்.

பெருமானின் அருளைப் பெற நடமாடும் குருவின் அருள் பெற்றால் போதும். குருவின் திருமேனி கண்டால் தெளிவு. அவரது திருமேனி கண்டால் தெளிவு. அவரது அவதாரத்தை கேட்டால் தெளிவு. தெளிவுபெறக் குருவின் சரணத்தைப் பற்றுவோம். அருவமானவனை உருவமாக வரச்சொன்ன பாடல் இது. உளதுக்கு உருவம் உண்டு. இலதுக்கு உருவம் கிடையாது. மரு என்பது வாசனை. மலர் என்பது பூ. மலருக்கு உருவமுண்டு. மருவுக்கு உருவம் கிடையாது.

மணிக்கு உருவம் உண்டு. ஒளிக்கு உருவம் கிடையாது. கருவுக்கு உருவம் உண்டு. உயிருக்கு உருவம் கிடையாது. கோசல நாட்டில் சரயு ஆறு ஓடியது. அது பயன்படாத இடமே இல்லை. சரயு ஆறு இல்லாத இடமே இல்லை. ஓதிய உடம்புதோறும் 'உயிர்' என ஆறு ஓடியது என்கிறது கம்பன் பாட்டு அந்தத் தண்ணீரின் பயன் கோசல நாட்டிற்கு முழுவதும் பயன்பட்டது. என்று பொருள். இனி கதியாய் விதியாய் என்றார். அதாவது விதி என்பது என்ன? பேசுவது எனக்குவிதி , கேட்கிறது உங்களுக்கு விதி. எனக்கு கதி பேசுவது. உங்களுக்குகதி கேட்பது. கதி புலப்படும். விதி புலப்படாது. விதி என்றால் என்ன? நடந்து முடிவு பெறுவதுதான் விதி. நாலரை மணிக்கு மல்லிகை மொட்டு வாங்கினோம். வாசனை இல்லை. ஆறு மணிக்கு மொட்டு மலராகிறது. அப்போது வாசனை வருகிறது எங்கிருந்து வாசனைவருகிறது.

பூ மலரும்போது வாசனை எப்படித் தானாக வருகிறதோ அதுபோல் ஒருவன் தன்னுடைய முற்பிறவியில் செய்த தன்னுடைய நல்வினை, தீவினைகள் உரிய நேரத்தில் அவனுடைய வாழ்க்கையில் வந்தடைவதுதான் விதி. ''மாமலர் நாற்றம்போல் ஏதுவின் நிகழ்ச்சி எதிர்வருவது''- என்றார் மணிமேகலை ஆசிரியர். மனத்திற்குள் இருக்கிற முருகனை உருவாய் வர வேண்டுமென்று எனஅழைக்கிறோம்.

பரிணாமம்தான் கதி. நல்லது கெட்டது சேர்ந்ததுவிதி. வெற்றி வந்தால் கர்வம் வரக்கூடாது. தோல்வி வந்தால் தளர்ச்சி வரக்கூடாது. எல்லாம் நம் 'விதிப்பயன்' அதுதான் 'விதி' என்ற தத்துவம். விதிப்பயன் என்னை வெருட்டாதிருக்கக் குருவடிவாக வந்து என்முன்னே காட்சிதருக என்ற வேண்டுகோளை, பிரார்த்தனையை முதலில் சொல்ல நூலுக்குள் வருவோம்.

''உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாள் குகனே''-51

கந்தரனுபூதி அருணகிரிநாதருக்கு முருகப்பெருமான் உபதேசம் செய்து அருளியது. அது மிகவும் பேரின்பம் தருவது. அந்தப் பேரின்பத்தை நான் உங்களுக்கு சொல்லப் போகிறேன். அது 51பாடல் கொண்ட ஒரு பேரின்பம். அதை அனுபவிப்பதும் மிகவும் பெரிய பாக்கியம்.

முதல் திருப்பாடல் காப்பு.

காப்பு

நெஞ்சக்குகையினுள் இருப்பவன் குஹன், அவன்தான் நெஞ்சம் எனும்கல்லை நெக்குருகவைப்பான்.

''நெஞ்சக் கனகல் ஒநெகிழ்ந்துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனைமா லைசிறந் திடவே
பஞ்சக் கரவா னைபதம்பணிவாம்''.

பணிவேன் என்று பாடாமல் 'பணிவோம்' என்று பாடுகிறார். என்ன காரணம்? பார்ப்போம். ஒருநாள் இராமன் தேரில் வந்து கொண்டு இருந்தான். அப்போது வழியில் ஒரு பெண் நின்றிருந்தாள். அந்தப் பெண் இராமனைப் பார்த்தாள். அப்பொழுது அந்தப் பெண்ணின் கண் வழியாக இராமன் மனதினுள் புகுந்துவிட்டான். மனத்திற்குள் வந்த இராமன் வெளியேபோகாமல் இருக்க அந்தப் பெண் கண்ணை மூடிவிட்டாள். உடனடியாக தோழி அழைத்து நான் இராமனுடைய இன்பத்தை அனுபவிக்கவேண்டும். ஆகவே என்னுடைய படுக்கைக்கு அழைத்துச் செல் என்று கூறினாள். நாம் இராமனை இருவருமாக சேர்ந்து அனுபவிக்கலாம் என்று கூறினாள். அதே போல்தான் ஆண்டவனுடைய பேரின்பத்தை அடைவதற்கு நாம் எல்லோரும் சேர்ந்து பன்மையில் 'பணிவாம்' என்று கூறினார். ஆண்டவனாகிய ஒருவரைத்தான் எல்லோராலும் எக்காலத்திலும் சமமாக அனுபவிக்கலாம், பாவிக்கலாம், பேரின்பத்தை அடையலாம், 'கூடியிருந்து குளிர்ந்தேலோர் எம்பாவாய்' என்று ஆண்டாள் அருளியதும் இவ்வாறே.

- தொடரும்

இறைவன் எங்கும் நிறைந்திருப்பினும் ஆலயத்தில் உள்ள திருவுருவத்தில் விளங்கித் தோன்றுகின்றான். பசுவின் உடம்பு முழுதும் பால் நிறைந்திருக்கின்றது. பாலைப் பெறமுயலுகின்ற ஒருவன் அதன் கொம்பையோ காதுகளையோ வாலையோ வருடினால் பால் கிடைக்குமா? பால் பெறவிரும்புவோன் பசுவின் மடியை வருடிப் பால் பெறுவதுபோல், இறைவன் அருளைப் பெற விரும்புவோன் ஆலயத்தில் சென்று இறைவன் திருமுன்நின்று வழிபட்டுத் திருவருளைப் பெறுதல் வேண்டும்.



- திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்.

அருளிச்செயல்களில் வாமன அவதாரம்

பாச்சுடர் வளவ. துரையன். எம்.ஏ., பி.எட்.,

தேரழுந்தூர் திவ்ய தேசத்தை மங்கை மன்னன் அருளிச் செய்கையில், அத்தலத்தில் தேன் பொருந்திய சோலைகளால் சூழப்பட்ட அழகிய தெருக்கள் உள்ளன, அங்குள்ள வீடுகளில் கல்வி, கேள்வி, ஒழுக்கம், சிறப்புப் பொருந்திய பழமையான கீர்த்தியை உடைய வேதம் வல்ல அந்தணர் வசிப்பர் என்றெல்லாம் கூறுகிறார்.

அத்திவ்ய தேசத்தில் எழுந்தருளி உள்ள பெருமாள் பற்றித் துதிக்கும் போது 'தேவர்களுடைய வருத்தம் நீங்கும்படி வாமனனாய் வந்து அவதரித்து, பிரமசாரியாய் மாவலியிடம் மூவடி நிலத்தை வேண்டிப் பெற்று அவனால் கொடுக்கப்பட்ட உடனே தானே தனது காலடியின் கீழ் அடங்கும்படி கொண்ட வெற்றியை உடையதும், ஒப்பற்றதும் முக்கியமானதுமான சக்கராயுதத்தைக் கையில் ஏந்திய எமது சுவாமி'' என்று திருமங்கையாழ்வார் அருள்வார்.

''வானவர்தம் துயர்தீர வந்து தோன்றி
மாணுருவாய் மூவடிமாவலியை வேண்டி
தானமரவேழுலகு மலிந்த வென்றித்
தனிமுதல்சக் கரப்படையென் தலைவன் காண்மின்
தேனமரும் பொழில்தழுவும் எழில்கொள் வீதிச்
செழுமாட மாளிகைகள் கூடந் தோறும்
ஆனதொல் சீர் மறையாளர் பயிலும் செல்வத்
தணியழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே''
(7-8-6)

பூதத்தாழ்வார் மண்ணுலகில் தோன்றிய மக்களுக்கு அருளுறை வழங்கும் போது

''பின்னால் அருநரகம் சேராமல் பேதுறுவீர்
முன்னால் வணங்க முயல்மினோ- பன்னூல்
அளந்தானைக் கார்க்கடல் சூழ் ஞாலத்தை எல்லாம்
அளந்தான் அவன்சேவடி இரண்டாம்

பிற்காலத்தில் நரகத்தை அடையாமல் இருக்கும்படிக்கு மனம் கலங்கி இருக்கும் மனிதர்களே! பல வகைப்பட்ட சாத்திரங்களினால் நிச்சயிக்கப்படுபவனும் கடல் சூழப்பட்ட பூமியை எல்லாம் அளந்து கொண்டவனுமான எம்பெருமானுடைய செவ்விய திருவடிகளை இப்போதே வணங்க முயற்சி செய்யுங்கள் என்பது பூதத்தாழ்வாரின் அருளுறையாகும்.

மண்ணுலகை அளந்து பெருமாள் ஏற்றுக் கொண்டதைப் பேயாழ்வாரும் அருளிச் செய்கிறார். வாமனனாய் உருவெடுத்து வந்து வாயினால் இறந்து கேட்டாய்! மண்ணை அளந்து கொண்ட நெடுமாலே! நான் ஏழேழ் பிறவிக்கும் உன்திருவடிக்கே ஆளாகி அச்சமே கொள்ளாதிருக்க அருளவேண்டும் என்று அவர் வேண்டுகிறார்.

''வாய்மொழிந்து வாமனனாய் மாவலிபால் மூவடிமண்
நீயளந்து கொண்ட நெடுமாலே - தாவியநின்
எஞ்சா இணையடிக்கே ஏழ்பிறப்பும் ஆளாகி
அஞ்சாதிருக்க அருள்
(மூன்றாம் திருவந்தாதி - 18

என்பது அவர் அருளிச்செயலாகும்.



கேட்பவர் நெஞ்சம் எல்லாம் நெக்குருகுமாறு நம்மாழ்வார் பெருமாளிடம் வேண்டுகிறார். ''மாயோனே! நீ ஒரு திருவடியைப் பரப்பிக் கடலால் சூழப்பட்ட உலகங்கள் எல்லாம் அத்திருவடியின் கீழ் ஆகும்படி தாவி அளந்தாய். மற்றொரு திருவடியால் மேல் உலகங்கள் எல்லாவற்றையும்

தடவினாய். உன்னைக் காணும் பொருட்டு வருந்தி எல்லாக் காலத்திலும் தீயின் அருகில் சேர்ந்த மெழுகைப் போல் உலகில் திரிவேனோ'' எனும் பொருளில்,

''பாயோர் அடிவைத்து அதன் கீழ்ப் பரவை நிலமெல்லாம்

தாய்ஓர் அடியால் எல்லா உலகும் தடவிவந்த

மாயோன்! உன்னைக் காண்பான் வருந்தி எனை நாளும்

தீயோடு உடன் சேர் மெழுகாய் உலகில் திரிவேனோ''

(6-9-6)

என்று நம்மாழ்வார் அருளிச்செய்கிறார்.

பொய்கையாழ்வார், ''எம்பெருமான் உலகளந்த காலத்திலே திருவடி பூமியை அளந்துகொள்ள, திருத்தோள்கள் திக்குகளிலே பரவிச் செல்ல திருமுடிமேலே உலகத்தை அளந்தது என்று சொல்வார்கள்'' எனும் பொருளில் வாமன அவதாரத்தை அருளிச் செய்கிறார்.

''அடியும் படிகடப்பத் தோள்திசைமேல் செல்ல

முடியும் விசும்பளந்த தென்பர்''

என்பது பொய்கையாழ்வாரின் அருளிச் செயலாகும். திருவிக்ரம அவதாரத்தின் தோள்கள் எல்லாத்திசைகளிலும் பரந்து சென்றது என்று அதன் விழுமிய பெருமையை அவர்பாடுகிறார்.

நாராயணன் படைத்த நான்முகன், பெருமாளைப் பணிந்ததை வாமன அவதாரத்தின் மேல் ஏற்றிப் புகழ்கிறார் திருமழிசையாழ்வார். அவரது நான்முகன் திருவந்தாதி ஒன்பதாம் பாடல்,

''குறைகொண்டு நான்முகன் குண்டிகைநீர் பெய்து

மறைகொண்ட மந்திரத்தால் வாழ்த்தி- கறைகொண்ட

கண்டத்தான் சென்னிமேல் ஏறக் கழுவினான்

அண்டத்தான் சேவடியை ஆங்கு

(நான்முகன் திருவந்தாதி - 9)

''பிரமதேவன் பணிந்து நின்று கமண்டல தீர்த்தத்தை வார்த்து வேதங்களில் உள்ள புருஷ சூக்தம் முதலிய மந்திரங்களால் மங்களாசாசனம் செய்து எம்பெருமான் உலகளந்த அக்காலத்தில் அப்பெருமானுடைய திருவடிகளை நீலகண்டனான சிவனுடைய தலையில் விழும்படியாக விளக்கினான்'' என்று விளக்குகிறார் திருமழிசைப்பிரான்.

இவ்வாறு ஆழ்வார் பெருமக்கள் தங்கள் அருளிச் செயல்களில் வாமன அவதாரத்தைப் போற்றி புகழ்ந்துள்ளனர்.

மனிதநேயப் பங்களிப்பில் ஆன்மீக முத்திரை

தமிழாகரர் தெ.முருகசாமி
புதுச்சேரி - 9

ஆன்மீகம் என்பது ஒரு கோட்பாடு. சமயம், மதம் என்பதைப் போல ஆன்மீகம் என்ற சொல்லும், பொருட்செறிவும், பொருள் நுட்பமும் உடைய ஒரு செஞ்சொல். ஆன்மீகம் என நீட்டி ஒலிக்கின்றோம். ஆன்மா-மிகம் - மிகைப்படுத்துவது. அதாவது உயர்த்துவது. உலக ஆசாபாச சகதியில் உழலும் ஆன்மாவை ஈடேற்றச் செய்யும் நெறிமுறைகளைக் கூறும் ஒருவகையான கோட்பாட்டின் குறியீடுதான் ஆன்மீகம்.

ஆன்மா தானாக ஈடேறாதென்பது ஒருசிலர்க்கே அமையும் சிறப்பாகும். இதனால் அது ஈடேறப் பக்கத்துணை ஒன்று வேண்டுமென்பது சிறப்பு விதி. இந்தப் பக்கத் துணையென்பது ஆன்மாவை நெறிப்படுத்த வல்லதாக இருக்க வேண்டும். அது உடனுறையும் அறிவார்ந்த சாமானிய மனிதராகவோ அல்லது சமூகம் மதிக்கத் தகுந்த சான்றாண்மைமனிதராகவோ அல்லது வழிகாட்டியாக வாழ்ந்து காட்டிய மகான்களின் அறிவுரை நூல்களாகவோ அமையலாம்.

ஞானசம்பந்தர்

இப்படிப் பக்கத் துணையாக அமையும் குறிப்பைத்தான், மணிவாசகர்தாம் பாடிய திருவெம்பாவையின் **''பத்துடையீர் ஈசன்பழவடியீர் பாங்குடையீர் புத்தடியோம் புன்மை தீர்த்து ஆட்கொண்டால் பொல்லாதோ''** என மங்கையர்களின் உரையாடலில் கோடிட்டுக் காட்டினார். ஆக, யாராக அல்லது எதுவாக இருந்தாலும் பக்குவப்பட வேண்டிய ஆன்மாவுக்குப் பக்குவப்பட்ட ஒன்று பக்கத்துணையாக வேண்டும் எனத் தெரிகிறது. அந்த துணை, ஆன்மாவின் தகுதிக்கேற்பக் கிட்டும். இந்த அடிப்படையில் ஓர் ஆன்மா படும் துன்பத்தைத் தனதாகக் கொண்டு களைய முயற்சிக்கும் பக்கத் துணையான மனித அன்பை மனித நேயம் என்பர்.

பிறிதின் நோயைத் தன்னோயாகக் கருதும் ஒருவகையான அன்புணர்ச்சிதான் நேயம். இதையே வேறுவகையாகக் கூறினால் ஒருவர்மீது ஒருவர்க்குள்ள அக்கறையைப் புலப்படுத்தும் அன்பையே நேயம் எனலாம். ஒருவர் மீது காட்டும் இப்பரிவை உலக அளவில் விரித்துக் காணும்போது அதை ஆன்மநேய ஒருமைப் பாடெனக் கூறினார் வடலூர் வள்ளலார். இந்த ஆன்மநேய ஒருமைப்பாட்டுணர்வில் திருஞானசம்பந்தர் வாழ்வில் நடந்த ஒரு நிகழ்ச்சியை ஆன்மீகத்தில் மனிதநேயப் பங்களிப்பிற்குரிய சான்றாக உணர்த்துகிறது இக்கட்டுரை.

திருத்தலப் பயணமாகத் திருவாரூர்க்கு அருகில் உள்ள கணபதீச்சரத்தை வழிபட்டு விட்டுத் திருமருகல் தலத்திற்கு எழுந்தருளி புலர்காலைப் பொழுதில் திருக்கோயிலின் புறத்தே இருந்து வந்த ஒரு பெண்ணின் அழுகுரலைக் கேட்டுத் திடுக்கிட்டார். அவலக்குரல் வந்த திசைநோக்கி விரைந்தார். ''இறைவா! உன்னைக் கருணை உடையவன் என்கிறார்களே! அது உண்மையா? என்

பொருட்டு அது உண்மையாகவில்லையே?'' என்று புலம்பிய ஓர் அபலைப் பெண்ணின் விசும்பலையும் வேதனையையும் நேரில் கண்ட ஞானசம்பந்தரின் ஆன்மா துடித்தது. கூடுவிட்டுக் கூடுபாய்பவர்போல அவள் நெஞ்சைத்தன் நெஞ்சாய் ஆக்கிக் கொண்டார்.

மருகல் என்பது ஊர்ப்பெயராயினும் அது வாழைக்கும் பெயர். வாழையடி வாழையாக வாரிசுகளைச் சுமந்து வாழ்வாங்கு வாழ விரும்பி ஒருவனைக் கைப்பிடிக்கத் துணிந்த ஒருத்தியின் சோதனையைக் களையும் நம்பிக்கை நட்சத்திரமாக ஞானசம்பந்தர் அவசமுற்ற அவள்முன் தோன்றியதோடு அப்பெண்ணைப் பார்த்து ''மருகல்'' (வருந்தாதே) என ஆறுதல் கூறுவார்போல நின்றார். துன்பப்படும் ஆன்மாவோடு இரண்டறக் கலந்து விட்டதால் மருகலில் உள்ள மாணிக்கவண்ணரை வணங்கி வழிபட வந்தவர் வழிபட்ட அப்பெண்ணைச் சுட்டிக் காட்டி அவளது பாதிப்பைப் பரமனது பக்தி இணையதளத்தில் **சடையாய் எனுமால்** எனத் தொடங்கும் பதிகமாகப் பதிவு செய்தார். இந்த அவலம் திருஞான சம்பந்தரின் முன்பாகவே நடந்தது என்பதற்குப் பதிகத்தின் பத்துப்பாடல்களிலும் சுட்டிய 'இவள்' என்ற அண்மைச்சுட்டே ஆதாரமாகும்.

திருமருகலுக்குப் பக்கத்தில் உள்ள வைப்பூர் என்ற சிற்றூரில் வாழும் தாமன் என்னும் வணிகனின் மகளான இவள், ஆறு தமக்கையர்க்குப் பின் பிறந்த ஏழாமவளாவாள். மூத்தவளாகிய முதல் தமக்கையைத் தன் தந்தை முறை மாமனுக்குத் திருமணம் செய்து கொடுப்பதாய் சொன்னபடிச் செய்யவில்லை. இவ்வாறே அடுத்தடுத்தவரையும் மாமனுக்குக் கொடுக்காமல் பணத்தாசையால் பிறருக்கே மணம் செய்ததால் ஏழாமவளாகிய இவள், தன் தந்தையின் வாக்கை நிறைவேற்றும் பொருட்டு மாமனுக்கு வாழ்க்கைப்பட இசைந்து பெற்றோர்க்குத் தெரியாமல், மாலைப் பொழுதில் மாமனுடன் உடன்போக்காக வந்தாள். வந்தவள் மருகலின் கோயில் பாங்கான ஓரிடத்தில் தங்க நேர்ந்தபோது மாமன் அரவு தீண்டி இறந்ததால் இரவு முழுவதும் அவலமுற்று சிவனருளைச் சிந்தித்தவளாய்ப் புலம்பிய புலம்பலைக்கேட்டு அங்கு வந்தவர்தான் ஞானசம்பந்தர். துன்பங்கண்டு துடித்த அவரது உள்ளம் சும்மா இருக்குமா? சிவனைச் சிந்திப்பார் போல நிந்தனை வாசகங்களாகவே இவள்பொருட்டு முறையீடு செய்யத் தொடங்கி விட்டார். முறையீடா அது? இல்லை? பேசுவது போன்ற ஏசல் உரை.

''குவளைப் பூப்பூத்து மணம் பரப்பும் மருகலை இருப்பிடமாகக் கொண்ட இறைவா! பெருமான் கழல் வாழ்க என எப்போதும் உன்னையே தொழுது எழும் வழக்கத்தையுடைய இப்பெண், சடையாய், விடையாய், சிந்தா, சிவனே, முந்தா என்றெல்லாம் இன்று உன்னைக் கூவியழைத்து உன்னைச் சரணடைந்து ஓலமிடுகின்றாளே. அது உன் காதில் விழவில்லையா? இவளது துன்பத்தைக் கண்டும் அதைப் போக்காமலிருப்பது உனது பெருமைக்குத் தகுதியாகுமா?'' என்றெல்லாம் பேசுவதுபோல் ஏசத் தொடங்கிவிட்டார் திருஞானசம்பந்தர்.

> **''சடையா யெனுமால் சரண்நீயெனுமால்**
> **விடையா யெனுமால் வெருவா விழுமால்**
> **மடையார் குவளை மலரும் மருகல்**
> **உடையாய் தகுமோ? இவளுள் மெலிவே''**

இப்படியாகவே பத்துப் பாடல்களும் அமைகின்றன. உடையாய் தகுமோ? இவள் உள் மெலிவே என்ற தொடர் ஆண்டவனை நோக்கி ஏவிய ஏசல் கணையான வாசகம். தன்னை மறந்து வருந்தும் இவளது மனநோய் உனக்குப் புரியாதிருக்காதே! புரிந்தும் வாளா இருப்பதுதான் உன் பெருமைக்குத் தகுதியா? எனக் கேட்பதென்பது ஆண்டவனுக்கும் திருஞானசம்பந்தருக்கும் உள்ள பக்திப் பசையால் ஒட்டிய உரிமையானது உலர்ந்து விட்டதோ என்ற ஐயப்பாட்டை வெளிப்படுத்தும் வாசகமாகத் தோன்றுகிறது. குவளை மலர்வதால் புறச்சூழல் மணக்கும் மருகலில் மாமனோடு மணம் நாடி வந்தவளை மணக்கச் செய்யாமல் மருகச் செய்தது சரியா? என்பதைத்தான் 'தகுமோ' என்ற ஏசல் உணர்த்துகிறது.

அடிக்க அடிக்க அம்மியும் நகரும் என்பதுபோல இவள் அவலத்தைக் கூறினாலாவது ஆண்டவனுக்கு மனம் இளகாதா என்ற உத்தியால் ஒவ்வொரு பாடலாக அவலத்தை அடுக்கிக் கொண்டே

போகிறார் சம்பந்தர். ''இவள், தான் மணக்க இருந்த மாமனை இழந்துவிட்ட சில நொடிக்குள் உடல் மெலிந்து அவசமுற்றதை இறைவா நீஅறியாயோ என்பார்போல **''எந்தாய் தகுமோ? இவள் ஏசறவே''** (2) என்றார். இதில் எந்தாய் என்ற சொல் சிந்தனைக்குரியது. 'எம்தந்தாய்' என்று தந்தையையும் 'எம்தாய்' எனத்தாயையும் ஒரு சேரக்குறிக்கும் செஞ்சொல்லாகும். தந்தை தாயாரை மறந்து மாமனுடன் வந்த இவளுக்கு நீயல்லவா தந்தை தாயாக இருந்திருக்க வேண்டும். என்ற உண்மையை ஆண்டவனுக்கு நினைவூட்டுவதுபோல் உள்ளது 'எந்தாய்' என்ற அரிய சொல்லின் குறிப்பு.

இதுபோல இவளது உள்ளச்சோர்வால் ஏற்பட்ட உடல்சோர்வை அவள் அணிந்திருந்த வளையல்கள் கழன்று ஓடுவதைப் பிறர் அறியும்போது நீயறியாமல் இருப்பதோடன்றி அவளது அழகையும் அலங்கோலமாக்கி விட்டாயே என்பார் போல **இறையார் (முன்னங்கை) வளைகொண்டு 'எழில் வல்வினையே'(3) என்றார்.**

அது போகட்டும் ஒருவர் துன்பப்பட்டால் அது எப்படி இருக்கும் எனச் சோதித்துப் பார்ப்பதற்கு இவளுக்குத் துன்பத்தைத் தந்து மகிழ்கிறாயா? என்பார்போல **''மெலிநீர்மை யளாக்கவும் வேண்டினையே''** (4) என்றார். இதில் ஆகவும் என்று கூறாது ஆக்கவும் என்றதால் இவளை இறைவனே துன்பத்தில் ஆழ்த்தினான் என்ற குறை தொனிக்கிறது.

அதுமட்டுமா? அழுகையென்றால் என்னவென்றே தெரியாத அழகிய இவளது கண்களின் அழுகையைத் துடைக்காமல் ஓயாமல் அழுமாறு செய்து விட்டாயே? என்பார்போல **'அணிநீல ஒண்கண் அயர்வாக்கினையே'** (5) என்றார்.

மேலும், இவள் தன் தாய் தந்தையரின் விருப்பமின்றி மாமனுடன் வந்துவிட்டதால் தான் இவளுக்கு இத்துன்பம் நேர்ந்ததாக ஊரரால் பழிதூற்றுமாறு செய்ய இவளை இப்படி ஆக்கிவிட்டாயோ என்பார்போல **'புடைபோந்து அலரும் படுமோ அடியாள் இவளே'**(6) என்றார்.

இன்னும், நாளும் உன்னையே தொழுதெழுந்து வணங்கும் வழக்கமுடைய இவளுக்குத் துயரைக் கொடுத்தாயே, என்பார்போல **'இரவும் பகலும் தொழுவாள் இவளைத்துயராக்கினையே'** (7) என்றார்.

இவற்றிற்கெல்லாம் மேலாக, மணமாலை சூடி மணக்கோலம் கொள்ளத் தயாராக இருந்த இவளுக்குத் துன்பமாலையைத் (துன்பத் தொடர்ச்சி) தந்தாயே. என ஏங்கிக் கூறுவார் போல **'அலங்கல் இவளை** (மணமாலை சூட வேண்டிய இவளை) **அலர் ஆக்கினையே'** (8) என்றார். இது போன்றதொரு துன்பத்தோடு யாரேனும் இம்மருகலுக்கு வந்ததுண்டா? அடைக்கலம் தேடி அரிதாக வந்தவளாகக் கருதாமல், இவளைத் துன்பத்தில் மருகி வைத்துவிட்டாயே, என்பார் போல **'அரியாள் இவளை அயர்வாக்கினையே'**(9) என்றும் கூறினார்.

தொடர்ந்து பெற்றோரை விட்டு மனோதிடத்தோடு மாமனுடன் வந்த இவளது உறுதியைச் சிதறடித்துவிட்டாயே என்பார் போன்று ''**நெறியார் குழலி நிறைநீக்கினையே**'' (10) என்று இறுதியாகக் கேட்டதோடு அமையும் ஞானசம்பந்தரின் கூற்றுக்களெல்லாம் பொதுவாகப் பிறர்படும் துன்பங்களோடு உடனே களையும் இயல்புடைய இறைவன் இப்பெண்படும் துன்பத்தைக் கண்டு வாளா இருப்பது ஏன் என வியப்படைவது போலுள்ள வாசகங்களாகும்,

மேலும் இடையிடையே இறைவனது கருணைகளையும் அடுக்கிக் கூறுகிறார் சம்பந்தர். இதன் மூலம் எப்படியாவது அந்த அபலைப் பெண்ணுக்குத் துன்பவிடுதலை கிடைத்து விடாதா என்ற ஏக்கத்தின் வெளிப்பாடாகவே ஆண்டவனது கருணைகளையும் இடையிடையே அடுக்கிக் கூறினார்போலும்!

'அழல்வாய் அரவும் பிறையார் சடையும் உடையாய்' (3) எனும்போது தீராப் பகையுடைய பாம்பையும் சந்திரனையும் பகைநீக்கித் தன் சடையில் வைத்துள்ளாய் என்ற பொருள் தொனிக்கிறது, இக்குறிப்பு **'மனம் ஒன்றி வந்தவர்களைப் பிரித்துவிட்டாயே! இது தகுமா?'** எனக்கூறுவது போல் உள்ளது.

'தக்கனது சாபத்தால் பழிக்கு ஆளான சந்திரனுக்கு அடைக்கலம் தந்த

நீ அடைக்கலமாக வந்த இவளுக்கு அடைக்கலம் தராதது வியப்பாக உள்ளதே' என வியப்பார் போல **'சடைமேல் மலரும் பிறை ஒன்றுடையாய்'** (6) என்று பாடினார்.

'பாய்ந்து வரும் கங்கையின் சீற்றத்தை சடையில் சுமந்துகொண்ட இறைவா, நீயா அமைதியாக வாழ்க்கையைத் தொடங்க வந்த இவளைச் சீற்றமடையச் செய்வது?' எனக் கூறுவார் போல, **'ஒலிநீர்ச் சடையில் கரந்தாய்'** (4) என்றார்.

'ஊரெல்லாம் பிச்சையேற்பதைத் தனக்குப் பழியாகக் கருதாமல் அதைப் புகழாகக் கருதும் ஆண்டவனே நீதனக்குரிய துன்பத்தை யாரேனும் துடைக்க முன்வர மாட்டாரா எனப் பிச்சைகேட்பாள் போல புலம்பும் இவளை அலறுமாறு செய்து விட்டாயே' என்பார்போல. **'உலகம் பலி நீதிரிவாய் பழியில் புகழாய்,** இவளை மெலிநீர்மையளாக்கி விட்டாயே (4) என்றார்.

இப்படியெல்லாம் பிறர்படும் துன்பத்தைக் கண்டு பொறுக்க முடியாத கருத்துக்களை ஆண்டவனிடம் வினாக்களாலும் வியப்புரைகளாலும் கூறிய திருஞானசம்பந்தர் **'புலரும் தனையும் துயிலாள்'** (6) என்ற தொடரை அந்த அபலைப் பெண்பட்ட வேதனையை எழுத்தால் வெளிப்படுத்திய துன்பத் தொலைக்காட்சித் தொடராக்கி விட்டார் எனலாம். மேலும் இத்தொடர் 'மற்றவர்க்கெல்லாம் பொழுது புலர்ந்தாலும் இவளுக்கு வாழ்க்கையாகிய பொழுது இன்னும் புலரவில்லையே' என்ற ஏக்கத்தைச் சுமந்த சொற்களாக இறைவன் மீது தொடுத்த ஞானசம்பந்தரின் எதிர்குரலாகவே அமைந்து விட்டது எனலாம்.

'இத்தகு வேதனையைக் கண்டுமா இறைவா நீசும்மா இருக்கின்றாய்? அப்படி இருப்பது உனது சுபாவம் இல்லையே!' என ஆண்டவனையே குற்றப்படுத்துவது போல **'மறியேந்து கையாய்'** (10) என இறைவன் ஏந்தும் மானைக் காட்டி இவளின் துன்பமானை விரட்ட இறுதியாக இறைவனை இறுகப் பற்றுகிறார் சம்பந்தர்.

மறி-மான், மானை இடக்கையிலே உடையவன் இறைவன். அந்த மானும் பக்கத்தில் இருக்கும் உமாதேவியை நோக்காமல் சிவனது முகத்தை நோக்கியபடியே ஏதோ முணுமுணுக்கிறது. தன்னையே பாடிக் கொண்டிருக்குமாறு இரு காதுகளிலும் அசுவதரன், கம்பளன் என்ற இருவரையும் காதணிகளாகக் கொண்ட இறைவன் அந்த மானின் ஒலியையும் கேட்டுக் கொண்டு தானே உள்ளான் என்று சிவப்பிரகாசர் சோணாசல மாலையில் கூறுவார். அதுபோலப் 'பொருள் பொதிந்த (அசுவதரன், கம்பளர்களின்) பாடல்களைக் கேட்பதோடே எளிய புல்லி மானின் பொருளற்ற ஒலியையும் கேட்கும் ஆண்டவனுக்கு இந்தப் பெண்ணின் அழுகுரல் ஓசைஆண்டவனின் காதில் விழவில்லையா?' என மானைப் பிடித்துள்ள செயலிலிருந்தே இறைவனைக் குற்றவாளியாக்கிப் பார்க்கும் சம்பந்தரின் துணிச்சல் ஆன்மீகத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஒன்று.

ஆக, இவ்வாறெல்லாம் ஆண்டவனை உசுப்பியும் உலுக்கியும் உரைத்த ஞானசம்பந்தரின் **'சடையாய் எனுமால்'** என்ற பதிகப் பாடல்களை மனிதநேயப் பங்களிப்பின் ஆன்மீக முத்திரையாகக் கொள்வதில் தவறில்லை எனலாம். இப்படி அறுதியிட்டு உறுதியாக நினைப்பதற்கு அவர் இதே மருகலைத் திருச்செங்காட்டங்குடியோடு இணைத்து **'அங்கமும் வேதமும் ஓதுநாவர்'** எனத் தொடங்கிப் பாடும் மற்றொரு பதிகப் பொருளோடு இணைத்து நோக்கினால்தான் **'சடையாய் எனுமால்'** என்ற பதிகம் மனித நேயத்தை வெளிப்படுத்திய ஞானப் புலம்பல் என்பது தெரிய வரும்.

மேலும் ஆண்டவனின் அற்புதங்களையே பாடி அவனைக் குளிரூட்ட வேண்டிய சம்பந்தர் ஓர் அபலைப் பெண்ணுக்காக ஆண்டவனையே அதட்டிப் பாடுகிறாரென்றால் ஈண்டந்த அபலைக்கு ஆண்டவனது அருள் கிட்டுமா? கிட்டாதா? என்ற போட்டியில் முனைந்து விட்ட ஆன்மீகப் போராட்டக் குரலின் உச்சத்தை யல்லவா **'சடையாய் எனுமால்'** என்ற பதிகப்பாடல்கள் காட்டுகின்றன. எனவே பிறதின் நோய், தன் நோய் போல் போற்றும் பார்வையே மனிதநேயப் பார்வை என்பதும் அதையே மனித நேயத்தின் மறுவாசிப்பான ஆன்மீகத்தின் ஞானமுத்திரை எனவும் கொள்ளலாம் என்க!

"எண்ணச் சிதறல்"

உலகெங்கும் அண்டத்தில் இருந்தபடி ஒளி ஆதிக்கம் செய்யும் ஆதித்யனின், ஆதவனின் பெருமைகளைக் கோடிட்டுக்காட்டி அந்த சூரிய பகவானைப் போற்றி நன்றி செலுத்தும் முகமாகக் கொண்டாடப்படும் தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் நன்னாளின் மகத்துவங்களை விவரித்து பேராசிரியர் தி.இராசகோபாலன் வரைந்திட்ட 'ஞாயிறு போற்றுவோம்' கட்டுரை வெகு அற்புதம்!

-த.சத்தியநாராயணன், அயன்புரம்.

உயர்திரு, இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு அவர்களுக்கு வணக்கம்.

ஐயா, எனக்கு ஒரு ஆசை, திருக்கோயில் மாத இதழ் மிக சிறப்பாக உள்ளது.

கயிலாயம் - ஓர் ஆன்மிகக் குறியீடு மிக நன்றாக உள்ளது. கயிலாய வரலாறும், அமரநாத் வரலாறும் 12 ஜோதிர்லிங்கம் வரலாறும் மிகத் தெளிவாக வெளியிட வேண்டும். இவ்வெளியீடை ஆவலுடன் எதிர்பார்க்கின்றேன்.

மகாசிவராத்திரின் சிறப்பு இதன் விபரம் அறிய ஆவல் இதையெல்லாம் திருக்கோயில் இதழில் வரும் என்று எதிர் பார்க்கிறேன்.

-கெ.ஞானப்பிரகாசம்

கொட்டாரம், ஆவினங்குடி

இடர் களைவாய் இறைவா

வினையின் பயனாய் ஆன்மாக்களுக்கு ஏற்படும் அல்லல்களை களைவது இறைவன் அருள். அவன் அருளின்றி இடர்கள் அகலா. அருள் கிட்டின் பகலவன் கண்ட பனி போல் விலகும் என்பது நிச்சயம்.

அடியார்களுக்கு ஏற்படும் இடர்களைக் களையும் இறைவனைப் போற்றித் துதிக்க திருமுறைகளில் மூவர் தேவாரங்களில் நான்கு இடர்களையும் பதிகங்கள் உள்ளன. அத்தகைய பதிகங்கள் திருமறைக்காட்டிலிருந்து மதுரைக்கு மங்கையர்க்கரசியின் வேண்டுதல்படி சைவம் தழைத்தோங்கவும், சமணம் விலகவும் புறப்பட்ட திருஞானசம்பந்தரின் பயணத்தின் முன்பு ''நாளும், கோளும்'' சரியில்லையென்று கூறிய அப்பர் பெருமானுக்கு பதிலுரையாக வெளியிட்ட பதிகம் சம்பந்தரின் ''கோளறு பதிகமாகும்''

திருநெடுங்களத்தில் அருளிய ''மறையுடையாய் தோலுடையாய்'' என்ற பதிகமும், ஆவடுதுறையில் அருளிய ''இடரினும் தளரினும்'' எனும் பதிகமும், வடதிருமுல்லைவாயிலில் சுந்தரரின் திருப்பாட்டாக வெளியிடப்பட்ட ''திருவும்'' என்ற பதிகமும் என்பர் சைவ நல்லுலகத்தினர். திருநெடுங்களத்தில் அருளிச்செய்த முதலாம் திருமுறையில் ''மறையுடையாய்'' எனத் தொடங்கும் பதிகத்தினைத் தொடர்ந்து

இவ்விதழில் ''விருத்தனாகி'' எனத் தொடங்கும் பதிகத்தினைக்காண்போம்.

''விருத்தனாகிப் பாலனாகி வேதமோர் நான்குணர்ந்து
கருத்தனாகிக் கங்கையாளைக் கமழ்சடைமேற் கரந்தாய்
அருந்தனாய வாதிதேவ னடியிணையே பரவும்
நிருத்தர்கீத ரிடர்களையாய் நெடுங்களமே யவனே''

திருநெடுங்களத்தினை விரும்பிக்கோயில் கொண்டுள்ளவனே! கிழவனாகி. பாலனாகி. மறைகள் நான்குணர்ந்து அவைகளின் கருத்தாகவும் ஆகிக் கங்கையைச் சடையில் மறைத்தவனே! பரம்பொருளாகிய ஆதி தேவனே! நின் திருவடிகள் இரண்டையும் வழிபடுகின்ற ஆடல் பாடல் உடைய அடியார்களின் இடர்களைக்களைந்து அருள்புரிவாயாக,

நம் இடர்கள் களைய ஞானசம்பந்தர் அருளிச் செய்துள்ள முதலாம் திருமுறையில் வரும் இப்பாடலை இம்மாத பாராயணப் பகுதியாகக் கொண்டு பாராயணம் செய்து பலன் பெறுவோமாக.

சிவ. அம்பலவாணன்

பதில்

திருக்கோயில்களில் நாட்பூசை எந்த அடிப்படையில் வந்தது?

கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், வேனில் எனப்பெரும் பொழுதை (ஓர் ஆண்டு) ஆறுவகையாகப் பிரித்தார்கள். அவ்வாறே இன்று வழக்கிலிருக்கும் இருபத்து நான்கு மணி நேரக்கால அளவு உள்ளிட்ட ஒரு நாளை ஆறு வகையாகப் பிரித்து அமைத்தார்கள்.

வைகறை	-	02-06
விடியல்	-	06-10
நண்பகல்	-	10-14
எற்பாடு	-	14-18
(சூரியன்சாயும் காலம் சாயங்காலம்)		
மாலை(முன்னிரவு)	-	18-22
யாமம்	-	22-02

என்று இவ்வாறு ஒரு நாளை ஆறுவகையாகப் பிரித்து வாழ்வியல் வளத்தை உணர்ந்தும் உணர்த்தியும் வந்தார்கள் என்பது தமிழர்தம் மரபியல் முறை.

தமிழர்தம் வாழ்வியல் முறையில் யாமப் பகுதி(ஜாமம்) வந்தேறியது. அது மூன்று மணிக் காலத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்தது. ஒரு நாளில் எட்டு யாமங்கள் அமைந்தன. பகலில் நான்கு யாமங்கள். இரவில் நான்கு யாமங்கள்.

திருக்கோயிற் பூசைமுறைகளும் ஆறு அல்லது எட்டு என்ற கால அளவையை அடிப்படையாகக் கொண்டே அமைக்கப் பெற்றன.

மகா சிவராத்திரி விழாவை எடுத்துக் கொண்டால் ஓர் இரவில் நான்கு காலவழிபாடு செய்தல் முறை என்பதை உணருகிறோம். இரவில் நான்கு காலப்பூசைமுறையைப் போலப் பகலிலும் நான்கு காலப் பூசைமுறை அமையவே மொத்தம் ஒரு நாளைக்கு எட்டுக் காலப் பூசைமுறை வந்துள்ளமையைச் சில திருக்கோயில்களில் இன்றும் காணலாம். இருபத்து நான்கு மணிநேரக் கால அளவை எடுத்து ஆறாகப் பிரித்தும் பூசைமுறையை அமைத்துக்காட்டியமை ஆகம வழிபாட்டில் அறிய முடிகிறது.

சோடச உபசாரங்கள் என்பன யாவை? விளக்கிக் கூறுக.

சோடசம் - பதினாறு

இறைவனுக்குச் செய்யும் பதினாறு வகையான பணிவிடைகள் சோடச உபசாரங்கள் எனப்படும், அவைகள் பின்வருமாறு.

1. ஆசனம்	-	அமர்வதற்குத் தவிசு அளித்தல்
2. பாத்யம்	-	கால் அலம்ப நீர் தருதல்
3. அர்க்யம்	-	கைகழுவ நீர் கொடுத்தல்
4. ஆசமநீயம்	-	பருகுவதற்கு நீர் வழங்குதல்
5. அபிடேகம்	-	திருமுழுக்குநீர் ஆட்டுதல்
6. வஸ்த்ரம்	-	அணிந்து கொள்ள ஆடைகள் நல்குதல்
7.கந்தம்	-	நறுமணப் பொருள்கள் தருதல்
8. புஷ்பம்	-	மலர் மாலைகள் சூட்டுதல்
9. தூபம்	-	அகில். சந்தனம் முதலிய நறுமணப் புகையிடுதல்
10. தீபம்	-	ஒளி விளக்குகள் ஏற்றி மும்முறை வலமாகச் சுற்றுதல்
11. நைவேத்யம்	-	உணவுப் பொருள்கள் படைத்தல்
12. கர்ப்பூரம்	-	கர்ப்பூரம் கொளுத்திக் காட்டிப் பணிதல்
13. சாமரம்	-	கவிரி வீசுதல்
14. ஆலவட்டம்	-	விசிறி கொண்டு வீசுதல்
15. சத்ரம்	-	குடை கவித்தல்
16. தர்ப்பணம்	-	கண்ணாடி காட்டுதல்

மகாவிட்டுணுவின் எந்தெந்த அம்சமாக ஆழ்வார்களும், இராமானுசரும் தோன்றினார்கள் என்பதைத் தெரிவித்திடுக.

1. பொய்கையார்	- சங்கு (பாஞ்சசன்யம்)
2. பூதத்தார்	- கதை (கௌமோதகி)
3. பேயார்	- வாள் (நாந்தகம்)
4. திருமழிசையார்	- சக்கரம் (சுதர்சனம்)
5. நம்மாழ்வார்	- விஷ்வக்சேனர்
6. மதுரகவி	- குமுதம்
7. குலசேகரர்	- கௌஸ்துபம்
8. பெரியாழ்வார்	- கருடன்
9. ஆண்டாள்	- பூமகள்
10. தொண்டரடிப் பொடி	- வனமாலை
11. திருப்பாணாழ்வார்	- ஸ்ரீவத்ஸம்
12. திருமங்கையாழ்வார்	- வில் (சார்ங்கம்)
13. இராமானுசர்	- ஆதிசேடன்

திருமழிசைப்பிரான்

இந்திரா ஆராவமுதன் - ஸ்ரீரங்கம்

பரமபுருஷனே பெரியோன் என்று வேதம் விதித்திருப்பதாக முண்டக உபநிஷத் கூறுகிறது. ஆழ்வார்கள் இதை அனுஷ்டித்துக் காட்டினார்கள். முதலாழ்வார்களுக்கு சமகாலத்தவராக திருமழிசைஆழ்வார் இருந்ததால், மதாந்தரங்களில் வீழ்ந்து இருந்த அவரை பேயாழ்வார் திருத்திப் பணி கொண்டார்.

தான் திருந்தியதை உலகிற்கு காட்ட விரும்பினார். சிறந்த நாவீறு உடைய இவரை உறையிலிடாதவர் என்று கூறுவர். அதன் பொருள், உருவிய கத்தியை உறையிலிடாத வீரர் என்றும் அந்த கத்தி இவருடைய நாக்கு என்பதும் ஆகும்.

பாகவதர் பெருமையையும் ஆசாரியன் பெருமையையும் முதன் முதலில் சுருக்கமாக இவர்தான் காட்டியபடியால் இவரை திருமழிசைப்பிரான் என்று அழைக்கிறோம். பிரான் என்றால் பரம உபகாரகர் என்று பொருள்.

திருச்சந்த விருத்தம், நான்முகன் திருவந்தாதி ஆகிய இவருடைய இரண்டு பிரபந்தங்களிலும், பரதத்வ நிர்ணயம் செய்வதையே பொழுதுபோக்காக வைத்துக் கொண்டார். கேட்டும் எழுதியும், வாசித்தும் பொழுது போக்கினேன் என்று நான்முகன் திருவந்தாதியில் தெரிவிக்கிறார்.

திருமழிசைஆழ்வார் பார்க்கவர் என்ற முனிவருக்கும் கனகாங்கி என்கிற தேவ மாதுவுக்கும் கை கால் முதலிய உறுப்புகள் இல்லாத பிண்டமாகப் பிறந்தார். மனம் வருந்திய பெற்றோர் இப்பிண்டத்தை ஒரு பிரம்புப் புதரின் கீழே போட்டுச் சென்றனர்.

திருமால் திருமகள் சமேதராக அங்கு சென்று அப்பிண்டத்தை அன்புடன் நோக்கியவுடன் ஒரு அழகிய ஆண் குழந்தையாக மாறி அழத்தொடங்கியது. அதற்கு பசி, தாகம் இல்லாமல் இருக்கும்படி அருளிவிட்டு தன் திருக்கோலத்தையும் காட்டிவிட்டு பெருமாள் அகன்றார். பகவானின் பிரிவைத் தாங்க முடியாமல் மறுபடி குழந்தை அழ ஆரம்பித்தது.

பிரம்பு அறுக்கும் திருவாளன் என்பவன் புதரில் அழும் குழந்தையைத் தூக்கி, சுற்று வட்டாரத்தில் ஒருவரும் இல்லாததைக் கண்டு, குழந்தை இல்லாத தங்களுக்கு இறைவன் தந்த பரிசு என்று நினைத்து தன் மனைவி பங்கயச் செல்வியிடம் கொடுத்தான், அவளும் இறைவன் தந்த பரிசாக எண்ணி அதை அன்பாக வாங்கி பால் கொடுத்தபோது அது சாப்பிட மறுத்தது. உலக இயற்கைக்கு மாறாக இருக்கும் குழந்தையை எல்லாரும் அதிசயமாக பார்த்து வந்தனர்.

இந்த செய்தியை அறிந்த ஒரு முதுமையான வேளாளன் தன் மனைவியோடு வந்து அக்குழந்தையிடம் பாலை வைத்து பருகும்படி வேண்டினார். குழந்தையான திருமழிசைஆழ்வாரும் அவரின் பக்திக்கு இரங்கி பாலைக் குடித்தார்.

பால் சாப்பிடுவதைப் பார்த்து மகிழ்ந்த பங்கயச்செல்வி அந்த முதியவர்களையே தினமும் வந்து பால் கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொண்டாள். தினமும் அவர்கள் கொடுத்த பாலைக் குழந்தை குடித்து வந்தது.

ஒரு நாள், குழந்தை குடிக்காமல் வைத்த மீதி பாலை அந்த முதிய தம்பதிகள், தெய்வப்பிரசாதம் என்று நினைத்து குடித்தவுடன் இருவரும் முதுமை நீங்கப் பெற்று இளமை பெற்றனர். ஊரே அதிசயித்தது. மற்றும் ஒரு ஆச்சர்யம், அந்த தம்பதிகளுக்கு ஒரு குழந்தையும் பிறந்தது, அதற்கு கணிகண்ணன் என்று பெயரிட்டு வளர்த்து வந்தனர்.

ஏழு வயது வரை பிரம்பறுப்பாளனிடம் வளர்ந்த திருமழிசைஆழ்வார், தியானம் அஷ்டங்கயோகம் பயின்றார். சாக்கியம், சமணம் ஆகிய நூல்களைக் கற்றார். அதில் திருப்தி அடையாமல் சைவ சமயத்தில் சேர்ந்து சிவவாக்கியர் என்ற பெயருடன்

எல்லா சிவத்தலங்களையும் தரிசித்துவிட்டு திருமயிலைக்கு வந்தார்.

இவரை பேயாழ்வார் திருத்தி ஆட்கொண்டார். இவருக்கு பஞ்சசமஸ்காரம் செய்து ஸ்ரீ வைஷ்ணவனாக மாற்றினார். அதன் பிறகு மழிசையில் உள்ள ''கஜேந்திரஸரஸ்'' என்கிற குளத்தின் கரையில் திருமழிசைஆழ்வார் அமர்ந்து பரதத்வ நிர்ணயம் செய்ய யோகத்தில் ஆழ்ந்தார். பின் ஒரு மலைக்குகைக்குள் சென்று அமர்ந்தார்.

முதலாழ்வார்களான மூவரும் பல தலங்களுக்குச் சென்று வரும் போது ஒரு பேரொளியைக் கண்டனர். அதைத் தொடர்ந்து வந்தவர்கள் இந்த குகையை அடைந்து உள்ளே சென்றனர். பக்திசாரரின் பேரொளி என்று கண்டு கொண்ட அவர்கள் மூவரும் ''பார்க்கவ முனிவரின் புதல்வரே'' என்று அழைத்தனர்.

திருமழிசைஆழ்வாரும் பதிலுக்கு ''தாமரை, குருக்கத்தி, செவ்வல்லி'' என்கிற மூன்று பூக்களும் புகழ் பெறக் காரணமான ''மெய்ஞ்ஞான செல்வர்களே'' என்று அழைத்து வரவேற்றார். அன்பு மிகுதியால் ஒருவரை ஒருவர் ஆலிங்கனம் செய்து கொண்டு, சிறிது காலம் யோகத்தில் இருந்துவிட்டு எல்லாரும் விடைபெற்றனர்.

திருமழிசையார் மட்டும் தனது அவதார தலமான திருமழிசைக்கு வந்து தங்கும்போது திருமண் கிடைக்காமல் வருந்தினார். திருவேங்கடநாதன் அன்று இரவு அவர் கனவில் தோன்றி திருமண் இருக்கும் இடத்தைக் காட்டித் தந்தார். இருவரும் திருமண்ணை எடுத்து 12 திருநாமங்கள் இட்டுக் கொண்டு இவ்வாறு வணங்கினார்.

''ஆல நிழல் கீழ் அறநெறியை நால்வர்க்கு
மேலை யுகத்துரைத்தான் மெய்த்தவத்
தோன்- ஞாலம்
அளந்தானை ஆழிக் கிடந்தானை
ஆல்மேல்
வளர்ந்தானைத் தான் வணங்குமாறு''

சில நாட்கள் சென்றபின் திருவெஃகாவுக்குச் சென்று பொய்கை ஆழ்வார் அவதரித்த பொய்கையின் கரையில் அமர்ந்து தியானத்தில் அமர்ந்தார். அவ்வமயம், இவரது அருளால் பிறந்த கணிகண்ணன் இவரை வணங்கினார். சீடராகி பல தொண்டுகள் செய்ய தலைப்பட்டார்.

ஒரு மூதாட்டி இவர்கள் தங்கும் இடத்தை சுத்தம் செய்து உதவி வந்தாள். அவளுடைய தொண்டில் மகிழ்ந்த ஆழ்வார், அவளுக்கு ''என்ன வேண்டும்'' என்று வினவ, அவளும் 'இக்கிழத்தன்மை போக வேண்டும்' என்று வேண்ட, அவ்வாறே அவள் கிழத்தன்மை நீங்கி இளமை பெற்றாள்.

அந்த ஊர் அரசன் அவளை மனைவியாக ஏற்றார். அரசனும் தன் மனைவியிடம் தானும் இளமையாகமாற உதவிபுரியுமாறு கேட்க, அவளும் ஆழ்வாரின் சீடர்தினமும் பிக்ஷைக்கு வருவதால் அவர்மூலம்உதவிகேட்பதாககூறினாள்.

மறுநாள் பிக்ஷைக்கு வந்த கணிகண்ணனை காவலர்கள் அழைத்துச் சென்று அரசனின் முன்புநிறுத்தினர். அரசனின் விருப்பத்திற்கு கணிகண்ணன் இணங்கவில்லை. கோபம் கொண்ட அரசன் நாட்டைவிட்டு வெளியேறுமாறு உத்தரவிட்டான்.

கணிகண்ணன் இவ்விஷயத்தை ஆழ்வாரிடம் கூறினார். ஆழ்வாரும், ''நானும் பெருமாளை எழுந்தருளப் பண்ணிக் கொண்டு கூட வருகிறேன்'' என்று சொல்லி பெருமாளிடம் சென்று

''கணிகண்ணன் போகின்றான்
காமருபூங்கச்சி
மணி வண்ணாநீகிடக்கவேண்டா -
துணிவுடைய
செந்நாப்புலவனும் போகின்றேன் நீயும்
உந்தன்
பைந்நாகப் பாய் சுருட்டிக்கொள்''

என்று பாடினார்.

பெருமாளும் தன் நாகத்தனையைச் சுருட்டிக் கொண்டு, ஆழ்வாரைப் பின்தொடர்ந்தார். அவரைத் தொடர்ந்து ஏனைய மற்ற தெய்வங்களும் பின்பற்றினர்.

ஊரே இருட்டில் ஆழ்ந்தது. பொலிவு இழந்தது. அரசன் அமைச்சர்களிடம் காரணம் வினவினான். ஒற்றர்கள் மூலம் அறிந்த செய்தியை அமைச்சர்கள் அரசனிடம் தெரிவித்தனர். அரசனும் தன் தவறை உணர்ந்து தெளிவு பெற்று கணிகண்ணனிடம் மன்னிப்பு வேண்ட, கணிகண்ணன் ஆழ்வாரை வேண்ட, ஆழ்வாரும் பெருமாளைப் பார்த்து,

''கணிகண்ணன் போக் கொழிந்தான்
காமருபூங்கச்சி
மணிவண்ணா நீகிடக்க வேண்டும் -
துணிவுடைய

செந்நாப் புலவனும் போக்கொழிந்தேன் நீயும் உந்தன்
பைந்நாகப் பாய் படுத்துக் கொள்''

என்று விண்ணப்பம் செய்தார். மறுபடியும் எல்லாரும் கச்சிப்பதியை அடைந்தனர். காஞ்சி நகரம் பழையபடி பொலிவு பெற்றது.

இந்த முறை பெருமாள் முன்பு போல வலது கையை கீழேவைத்துக் கொள்ளாமல், இடது கையை கீழ்ப்பட வைத்துக் கொண்டு, தலைமாடு, கால் மடாக மாறி கண் வளர்ந்தார். அதனால் அவருக்கு ''சொன்னவண்ணம் செய்த பெருமாள் என்று தமிழிலும் ''யாதோக்தகாரி'' என்று வடமொழியிலும் பெயர் உண்டாயிற்று. பெருமாள், ஆழ்வார், கணிகண்ணன், மற்ற தெய்வங்கள் ஓர் இரவில் வெளியே தங்கின இடம் ''ஓரிருக்கை'' அல்லது ''ஓர் இரவு இருக்கை'' என்று அழைக்கப்படலாயிற்று.

கும்பகோணம் செல்லும் வழியில் உள்ள பெரும்புலியூர் என்ற கிராமத்திற்கு ஆழ்வார் சென்றார். ஒரு வீட்டுத் திண்ணையில் சென்று அமர்ந்தார். அந்த வீட்டின் உள்ளே வேதம் ஓதி வந்த அந்தணர்கள் இவரை நாலாம் வருணத்தவராக நினைத்து இவர் முன் வேதம் ஓதக்கூடாது என்று நினைத்து நிறுத்தினார்கள். அதை உணர்ந்த ஆழ்வாரும் அந்த இடத்தை விட்டுக்கிளம்பினார்.

அந்தணர்களுக்கு தாங்கள் நிறுத்திய இடம் ஞாபகத்துக்கு வரவில்லை, அதை அறிந்த ஆழ்வார், குறிப்பால் ஒரு நெல்லை நகத்தால் பிளந்து காட்டினார். அந்த குறிப்பை உணர்ந்த அந்தணர்கள் மறுபடி விட்ட இடத்திலிருந்து தொடங்கியதுடன், ஆழ்வார் ஒரு மகான் என்று உணர்ந்து அவரிடம் சென்று மன்னிப்பு கேட்டனர்.

அதற்குள், அந்த ஊர் பெருமாள் இவர் செல்லும் திசையை நோக்கி நோக்கி தன் தலையைத் திருப்பிப்பார்க்கும் அதிசயத்தை அர்ச்சகர் மூலம் கேள்விப்பட்ட சில முக்கிய பிரமுகர்கள் அவரை வணங்கி அந்த ஊரில் நடக்கும் யாகசாலைக்கு அழைத்துச் சென்று அவரை ஒரு உயர்ந்த பீடத்தில் அமரவைத்தனர். வேள்விச் சடங்கர்கள் இச்செயலை எதிர்த்தனர். அவர்களுக்கு நல்ல அறிவு ஏற்படும் வண்ணம் ஆழ்வார் எம்பெருமாளைப் பார்த்து

''அக்கரங்கள் அக்கரங்கள் என்று மாவ தென்கோலோ
இக்குறும்பை நீக்கியென்னை ஈசனாக்க வல்லையேல்
சக்கரங்கொள் கையனே சடங்கர் வாயடங்கிட
உட்கிடந்த வண்ணமே புறம் பொசிந்து காட்டிடே''

என்று கூறி பிரார்த்தித்தார்.

தான் பாற்கடலில் பள்ளி கொண்டிருக்கும் காட்சியை திருமால் ஆழ்வாரின் திருமேனியில் காட்டித் தந்தார், இந்த கால தொலைக்காட்சி பெட்டியைப் போல, இத்தகைய அர்ச்சாரூப நிலையை யாவரும் காணுமாறு இருக்கும்படி பக்திசாரர் பெருமாளை வேண்டிக் கொண்டார், கண்டபடி பேசிய சடங்கர்கள் மன்னிப்பு கேட்டுவிட்டு ஆழ்வாருக்கு அக்கிரபூஜை மரியாதையைத் தந்தனர். பின் ஆழ்வார் திருக்குடந்தை சென்றார். ஆராவமுதனின் ஏரார் கோலத்தைக் கண்டு

''காவிரிக் கரைக் குடந்தையுள்
கிடந்தவாறு எழுந்திருந்து
பேசு வாழி கேசனே'' என்றவுடன்

பெருமாள் தலையைத் தூக்கி எழுகின்ற பாவனையில் எழ முற்பட்டார்.

உடனே, ''வாழி கேசனே'' என்று ஆழ்வார் மங்களாசாசனம் செய்தவுடன் அவ்வாறே நிறுத்திக் கொண்டு பெருமாள் உத்தான சாயி கோலத்துடன் காட்சி தருவதைத்தான் நாம் இப்போதும் வணங்கி மகிழ்கிறோம்.

தான் எழுதிய எல்லா நூல்களையும் காவிரி பிரவாகத்தில் எறிந்தார். நாம் இப்போது அனுபவிக்கும் திருச்சந்தவிருத்தம், நான்முகன் திருவந்தாதி ஆகிய இரண்டு ப்ரபந்தங்கள் மட்டும் தான் வெள்ளத்தை எதிர்த்து வந்தது, இவ்விரண்டு நூல்களையும் எடுத்துக்கொண்டு போய் ஆராவமுதனை சேவித்தார்.

பின் அன்ன ஆகாரங்களை விட்டு விட்டு, காய் கிழங்குகளை மட்டும் சிறிது அமுது செய்து பெருமாளை தியானம் செய்து கொண்டே வாழ்ந்து திருநாட்டுக்கு எழுந்தருளினார்.

நாடு உய்யும் நல்ல வழிகளை பாசுரங்களின் மூலம் உணர்த்தியதுடன், இயற்கை வருணனைகளையும் பொருட்செறிவு மிடுக்கு நிறைந்த தத்துவப் பொருளையும் பாசுரங்களின் மூலம் நமக்கு அருளிய ஆழ்வாரான உறையிலிடாத, பக்தி சாரரான திருமழிசைப் பிரானின் திருநக்ஷத்திர நாள் 3-2-2007 ஆகும்.



திருமந்திர உபதேசம்

திருமந்திரச்செல்வர் டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப. (ஓய்வு)

“மலங்களைந்தாமென மாற்றி
தலங்களைத்தானற் சதாசிவமான
புலங்களைந்தான் அப்பொதுவினில் நந்தி
நலங்களைந்தானுள் நயந்தான் அறிந்தே”

(திருமந்திரம் 118)

ஆணவம், மாயை என்கிற மலங்களைப் பற்றி சிறிது தெரிந்து கொண்டோம். ஆணவம், மூலமலம், மாயை என்பது காரியப் பொருள்களாக, உடல், கருவிகள், உலகம், அனுபவிக்கப்படும் பொருள்கள். அனுபவம் என்று பலவகைகளாக நிற்கின்றது, உயிரானது இவற்றோடு தன்னைச் சேர்த்துக் கொண்டு, உடலே தான் என்ற உணர்வில் நிற்கும் போது, மாயை, அறியாண்ம வழியாக, ஆணவத்தின் நிலையை வலுப்படுத்துகிறது. அதனால், உலகம் உண்மை என்ற தவறான கருத்து உயிருக்கு ஏற்படுகிறது, உயிர், எல்லாவற்றிற்கும் ஆதாரமாக, அடிப்படையாக காரணமாக உள்ள பரம் பொருளைக் காண்பதில்லை.

“மாயை மறைக்க மறைந்த
மறைப்பொருள்
மாயை மறைய வெளிப்படும்
அப்பொருள்”

என்று (திருமந்திரம் (2548) தெரிவிக்கின்றது.

அதே நேரத்தில், மாயையின் கருவிகள் சிறிது உயிருக்கு அறிவைத் தர உதவுகின்றன என்பதும் இறைவனுடைய திருவருளே. உயிர் ஆணவ மலத்தால் கட்டுப்பட்ட கேவல நிலையில் உயிர்சடம் போல் கிடக்கின்றது. அது அறிவுப் பொருள் ஆயினும் அதன் அறிவு செயல்படவில்லை. அசுத்த மாயையால் செயல்படாது கிடந்த, உயிரின் இச்சை, அறிவு, செயல்திறன் போன்றவை செயல்படத் தொடங்கும். அதன் விளைவாக உயிரின் ஐந்து அறிவுக் கருவிகள் (ஞானேந்திரியங்கள்) மனம், புத்தி, அகங்காரம், சித்தம் ஆகிய உட்கருவிகளும் செயல்படத் தொடங்கும். அதாவது, உயிரின் அறிவு அவற்றின் மூலமாக விளங்கும். தனது அறிவால், உயிரானது, தன்னையும் தெரிந்து கொள்ள இயலும் என்பதையும் மாயா கருவிகள் சுட்டிக் காட்டுகின்றன. ஆணவ மலத்தின் காரணத்தால், உயிருக்குத் தன்னை அறிந்து கொள்ள இயலவில்லை. திருவருளின் சேர்க்கையே இதற்கு வழி வகுக்கின்றது. கருவிக் கணங்களுடன் சேர்ந்து உயிர், பல பிறப்புகளை எடுக்கின்றது. கேவல, சகல நிலை என மாறி, மாறிப் பெருகுகிறது. அநித்யமான பிறவிகளையும் ஆணவம், மாயை, கேவலம், சகலம் போன்றவற்றையும் கடந்து சுத்தநிலையை, இறைவனுடைய திருவருள் அடையவும் செய்யும்.

''மாயையிற் சேதனம் மன்னும் பகுதியான்
மாயையின் மற்றது நீவுதல் மாயையாம்
கேவலமாகும் சகலமாய் யோனியுள்
தோயும் மனிதர் துரியத்துள் சிவனே''

(திருமந்திரம் 2226)

நம்முடைய உடம்பும், கருவிகளும் ஒரு விளக்கு போன்றவை, நிலையற்றவை. தோன்றி, பிறகு மறைந்து விடும். உடம்பும், கருவிகளும், உலகப் பொருள்களும் தோன்றி மறைவதை நான் பார்க்கிறேன் என்கிறார் திருமூலர். விளக்காக இருந்தாலும் இந்த உடம்பு பல துன்பங்களைத் தருகிறது. உடம்பினால் துன்பமே தவிர இன்பம் இல்லை. இந்த விளக்கு ஒரு அளவுக்கு வழிகாட்டலாம். ஆனால் நமக்கு நிறைவை அளிக்காது மாறாக, புனிதமான விளக்கு ஒன்று உண்டு. அது நம்மை விட்டு நீங்காமல், எப்போதும் ஒளிவீசிக் கொண்டே இருக்கும். அது, நமக்கு வெகு அருகே இருக்கின்றது என்று திருவருளாலும் குருவருளாலும் அறிகின்றேன். அத்தகைய விளக்கைப் பெற்று இன்புறுவதற்கு முயன்று கொண்டிருக்கிறேன் என்கிறார் திருமூலர்.

''மாய விளக்கது நின்று மறைந்திடும்
தூய விளக்கது நின்று சுடர்விடும்
காய விளக்கது நின்று கனந்திடும்
செய விளக்கினைத் தேடுகின்றேன்''

(திருமந்திரம் 2367)

ஆணவம் சடப்பொருள் என்றே சொல்வார்கள். அது அறிவுடைய பொருள் அல்ல. ஆணவம், உயிரை ஒட்டி நின்று அறியாமை போன்றவற்றைச் செய்வது இறைவன் திருவருளாலே தான் நடக்கின்றது. ஆணவத்தின் செயல்பாட்டால், உயிர்கள் ''தான்'' என்ற முனைப்புப் பெற்று, உலக காவியங்களில் இறங்குவது மூலமாகத்தான். தான் செய்த வினைகளின் பயன்களை அனுபவித்து, அவற்றைக் கழித்து உய்தி பெற முடியும்.

ஆணவத்தைப் போலவே, மாயையின் காரியமாகிய கருவிக் கூட்டங்களும் சடப் பொருள்களே. அவற்றை ''உபாதி'' என்கிறார் திருமூலர். ''உபாதி'' என்றால் செயற்கை பொருள்கள். உயிர் அறிவுடைய பொருளாக இருந்தாலும், அவற்றுடன் சேர்ந்தே நிற்கிறது. அவையே தான் என்று கருதுகிறது. அவற்றால் உந்தப்பட்டு, மேற்கொள்கிற செய்கைகளால் உயிர் மாசுபட்டு நிற்கிறது. உயிரின் படிநிலை வளர்ச்சியில் தான் மாயா காரியங்கள் அல்ல என்று உணர்ந்து கொள்வது ஒரு முக்கியமான கட்டம். உயிருக்கு உயிராக இருக்கின்ற சிவன் தனது திருவருளால், இந்த உணர்வினை, உயிரின் பக்குவத்திற்கேற்ப ஊட்டுகிறான். சகலர்க்கு குருவாய் வந்து உணர்த்தும் தேகம் அதுவே. அப்போது உயிரானது, தான் மாயா காரிய கூட்டமல்ல என்று தெரிந்து கொள்கிறது. அதிலிருந்து பிரிந்து, உலகத்தோடு இணைந்திருக்கும் நிலையில் கிடைக்கும். விழிப்பு, கனவு, உறக்கம் போன்ற அறிவுப் பொருள் என்று உணர்ந்து, அறிவு மயமாக நிற்கும் என்கிறார் திருமூலர்.

''மாயா உபாதி வசத்தாகும் சேதனத்து
ஆய குரு அருளாலே அதில் தூண்ட
ஓயும் உபாதியோடு ஒன்றின் ஒன்றாது உயிர்
ஆய துரியம் புகுந்தறிவாகதே''

(திருமந்திரம் 2014)

திருமூலர் பெருமான் வழங்கியுள்ள, எல்லோராலும் பேசப்படுகின்ற ''மரமும், யானையும்'' என்கிற உதாரணம், உயிர், தனது அறியாமை நிலையில் உலகத்தைப் பார்த்து, பரத்தைப் பாராததும், திருவருளால் அறிவுதயம் ஏற்பட்டு பரத்தைப் பார்த்து, உலகத்தைப் பாராததும், மேற்படி கருத்தையே வலியுறுத்துகிறது.

''மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்
பரத்தின் மறைந்தது பகர்முதல் பூதம்''

(திருமந்திரம் 2290)

ஆணவம், மாயை, கண்மம் என்பவை மும்மலங்கள். இவற்றுடன் மாயேயம், திரோதனம் என்பன சேரும் போது மலங்கள் ஐந்தாகின்றன.

அடுத்து, கன்மம் அல்லது வினையைப் பற்றிச் சிறிது சிந்திக்கலாம். மனம், வாக்கு, காயம் ஆகியவற்றால் உயிர் செய்யும் வினைகளை செய்த உயிரே அனுபவித்தாக வேண்டும். இவ்வாறு செய்த எண்ணற்ற, அறம், பாவங்களின் பயனாக வரும் இன்ப,

துன்பங்களை அனுபவிப்பதற்காக, உயிரானது இந்த உலகில் பல பிறப்பு, இறப்பு நிலைகளை அடைகிறது. அறம், பாவங்களின் பயனை இறைவனே உயிருக்கு கூட்டுவான். ஒரு உயிர் அனுபவிக்க வேண்டியவற்றை அந்த உயிரே அனுபவித்தாக வேண்டும்.

நாம் இந்த பிறவியில், கல்வி, செல்வம், நற்குடியில் பிறத்தல் போன்றவற்றைப் பெறுகிறோம். பலர் இவை இல்லாமல், வாழ்க்கை நடத்துகின்றனர். இவையெல்லாம் முன்னம் பிறவிகளில் நாம்செய்த நல்வினை, தீவினைகளின் பயனே என்று உணர வேண்டும். இப்பிறவியில் நாம் செய்பவை, பயனாக நுட்பமாக நம்முடைய மனம், புத்தி போன்றவற்றில் தங்கி ஆகாமியமாக இருக்கும். பல பிறவிகளின் ஆகாமியக் கூட்டமே சஞ்சதம் என்று சேர்ந்து நிற்கும். அதில் ஒரு பகுதியை உயிர் அனுபவிக்க வேண்டி, இப்பிறவிக்கு இறைவன் கூட்டுவான். அதுவே பிராநப்தம் அல்லது நுகர்வினை எனப்படும்.

உழவன் விதைத்து விளைந்த நெல்லின் ஒரு பகுதியை உணவுக்காக சேமித்து வைத்துக் கொள்கிறான். ஒரு பகுதியை விதைக்காக பயன்படுத்துகிறான். அதே போல நாம் செய்யும் நல்வினை, தீவினை எல்லாம் அறமும் பாவமுமாய் நின்று, இன்பமும், துன்பமுமாய் பயன்தரும். அவற்றை அனுபவிப்பதாலேயே, தீர்த்துக் கொள்ளலாம். இது எக்காலத்தும், எவருக்கும் பொருந்தும் முறைமையாகும்.

''மேலைக்கு வித்தாகி, விளைந்தவை உணவும் ஆகி
ஞாலத்து வருமாபோல, நாம் செய்யும் வினைகள் எல்லாம்
ஆலந்தான் பலமா செய்யும் இதம் அகீதங்கட்கு எல்லாம்
முலைத்தது ஆகி, என்றும் வந்திடும், முறைமையோடே''

(சிவஞான சித்தியார் 102)

சிவராத்திரியில் பார்வதிதேவி பூசித்த தேவிகாபுரம்

சிவராத்திரிக்கு உரிய பல தலங்களில் வடஆற்காடு மாவட்டத்தில் உள்ள தேவிகாபுரம் தனிச்சிறப்புடைதாகத் திகழ்கிறது.

ஒரு சமயம் உலகம் ஒடுங்கிய ஊழி இரவில் உலகம் வெள்ளத்தில் அமிழ இங்குள்ள மலைமட்டும் பொன் போல பிரகாசித்து மிதந்தது. இம்மலைமீது தேவியார் சிவலிங்கம் அமைத்து நான்கு கால பூசையைச் செய்தாள். அவள் பூசைசெய்யும் சிறப்பையும் நேர்த்தியையும் காண சிவபெருமான் அவள் அருகில் சுயம்புலிங்கமாக எழுந்தருளினார். அவளுடைய அன்பையும், பக்தியையும் கண்டு அவளுக்குத் தரிசனம் தந்து அவளைத்தன் இடப்பாகத்தில் சேர்த்துக் கொண்டார்.

இத்தகைய திருத்தலமே தேவிகாபுரமாகும். இது வடஆற்காடு மாவட்டத்தில் உள்ள ஆரணிக்கும் போளூருக்கும் இடையில் அமைந்துள்ளது.

இங்குள்ள மலைமீது அழகிய சிவாலயம் உள்ளது. இந்த ஆலயத்தின் கருவறையில் அம்பிகை அமைத்து வழிபட்ட தேவிச்சுரம் அவள் பூசையைக் காண எழுந்த சுயம்புலிங்கமான கனககிரீசுவரரும் எழுந்தருளி உள்ளனர். இப்போது தேவிபூசித்த லிங்கம் காசிவிசுவநாதர் என்றழைக்கப்படுகிறது. இதுவே கருவறையின் மையத்தில் உள்ளது. அதன் வடமேற்கில் சுயம்புலிங்கம் அமைந்துள்ளது. இது போன்ற பிரதிஷ்டா லிங்கமும், சுயம்புலிங்கமும் ஒரே கருவறையில் இருப்பது ஓரிரு தலங்களில் மட்டுமேயாகும்.

இங்கு சிவராத்திரி சிறப்புடன் கொண்டாடப்படுகிறது. சிவபெருமான் சிவராத்திரியில் பூசித்த தேவிக்கு இவ்வூரில் பிரதானம் கொடுத்து பெரியநாயகி எனும் பெயரில் கோயில் கொண்டு அருள்பாலித்தார். அவள் பெயரிலேயே இவ்வூர் தேவிகாபுரம் என்றழைக்கப்படுகிறது.

மலையின் அடிவாரத்தில் அமைந்த தேவிகாபுரத்தின் மையப்பகுதியில் பெரியநாயகி கோயில் அமைந்துள்ளது. தேவியின் ஆன்மாவில் சிவமூர்த்தி எழுந்தருளியிருப்பதால் இங்கு தனியாக லிங்கம் இல்லை. தேவிக்கே முதன்மை அளிக்கப்பட்டு பெரிய ஆலயம் கட்டப்பட்டுள்ளது.

இத்தலத்தில் இன்றும் சிவராத்திரி காலங்களில் அம்பிகை பூசைசெய்வதாக ஐதீகம். எனவே சிவராத்திரி இரவின் நான்கு யாமங்களும், இங்கு வழிபடுவது நாமும் அம்பிகையோடு சேர்ந்து வழிபடுவதாகவே கருதப்படும்.

கனககிரீசுவரருக்கு நெய்க்காப்பும் வென்னீர் அபிஷேகமும் சிறப்புடையதாகப் போற்றப்படுகின்றது.

இயமன் வழிபட்ட வேளச்சேரி தண்டீஸ்வரம்

வெளிச்சேரி,

ஜினசிந்தாமணி சதுர்வேதி மங்கலம் எனும் வெளிச்சேரி,

புலியூர் கோட்டத்து கோட்டூர் நாட்டு பிரம்மதேயமான வெளிச்சேரி என்றெல்லாம் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படும் வெளிச்சேரி என அழைக்கப்பட்ட வேளச்சேரி சென்னை, கிண்டிக்கு அருகில் அமைந்துள்ளது. ஒரு காலத்தில்புலியூர் கோட்டத்துக்கு வெளியே அமைந்திருந்த நாடாதலால் வெளிச்சேரி எனவும், அவ்வூரில் நான்கு வேதங்களும் ஓதும் மறையவர் குடியிருப்புகள் இருந்ததால், சதுர்வேதி மங்கலம் எனவும், இப்பகுதி புலியூர் (வடபழனி) கோட்டத்தில் கோட்டூர் நாட்டில் அமைந்தபிரம்மதேய ஊராக இருந்தது என்றும் அறியமுடியகிறது.

கிண்டியிலிருந்து மூன்று கிலோமீட்டர் தொலைவில் தண்டீஸ்வரம் பேருந்து இறக்கத்தில் இறங்கினால் தண்டீஸ்வரர் திருக்கோயில் குளக்கரை தெரியும். அந்தக் குளம் சிவகங்கை என அழைக்கப்படுகிறது. சிவகங்கை குளக்கரையில் ஐந்து நிலை இராஜகோபுரத்துடன் தெற்குப்புற இராஜகோபுரம் சுதைகள் சிற்பங்கள் இல்லாமல், தூண்கள், கால்கள் போன்ற அமைப்புகள் அமைந்த, வழக்கமான இராஜகோபுர அமைப்பிலிருந்து மாறுபட்ட இராஜகோபுரமாக உள்ளது.

திருக்கோயில் உள், வெளிப்பிரகாரம் என்ற இரு பிரகாரங்களைக் கொண்டுள்ளது. தென்மேற்கு மூலையில் வைத்தீசுவரரும், வடமேற்கில் மீனாட்சி சுந்தரேஸ்வரரும், வடகிழக்கே நவக்கிரகங்களும், நாகர் மேடையும் அமைந்துள்ளன.

மூலவர் கருவறை கருங்கல்லால் அமைந்தது. கிழக்கு நோக்கி உள்ளது. தொன்மையானது. சோழர் கால கட்டிட பாணியில் அமைந்தது. கல்வெட்டுக்கள் உபானம், ஜகதி, முப்பட்டை குமுதம், கண்டம், கம்பு பட்டிகை போன்ற அமைப்புகள் சோழர் காலத்து கருவறை அமைப்பை உறுதிசெய்கின்றன. சுவரின் மேல்பித்தியில் பூதவரியும், அதன்மேல் யாளி வரியும், சதுரக்கால் அமைப்புடைய தரங்க போதிகையும், வீரகண்ட பலகையும் குடமும் அமைந்து சோழர் காலக் கட்டிடக் கலையை உறுதிசெய்கின்றன.

கருவறையில் தென்புறக் கோஷ்டத்தில் விநாயகரும் தேவகோஷ்டத்தில் தட்சிணா மூர்த்தி, அண்ணாமலையார், பிரம்மா ஆகியோர் உரிய இடங்களிலும் வடபுற கோஷ்டத்தில் துர்க்கையும் அமைந்து அருள்கின்றனர். சன்னதியின் கோமுகமருகில் சண்டிகேஸ்வரர் உள்ளார்.

கருவறையின் உட்புறம் தண்டீஸ்வரர் என அழைக்கப்படும் இறைவன் சிவலிங்க உருவில் காட்சிதருகிறார். கல்வெட்டுகளில் ''திருத்தண்டீஸ்வரமுடையார்'' ''திருத்தண்டீஸ்வரமுடையநாயனார்'' எனவும் அழைக்கப்படுகிறார். இந்த மூலவர் தண்டபாணீஸ்வரர் எனக் கூறப்படும் சுயம்புலிங்கம் என அழைக்கப்படுகிறது.

இயமன், சிவபூஜை செய்ய வேண்டிய நேரம் வரவே, தனது தண்டத்தை ஊன்றி

லிங்கமாகக் கருதி பூஜை செய்ததாகவும், பூஜை முடிந்தபிறகு தண்டத்தை எடுக்க தண்டம் வெளி வராமல் நட்ட இடத்திலேயே நின்றதால் - தண்டு ஈஸ்வரனாக மாறியதால் தண்டீஸ்வரர் எனப் பெயர் பெற்றதாகவும் கூறப்படுகிறது.

இத்தலம் வேதஸ்ரேணி எனவும் அழைக்கப்படுகிறது. சோமுகன் என்னும் அரசன் வேதங்களைத் திருடிக் கொண்டு வந்து இங்கு ஒளித்து வைத்ததாகவும், வாழ்ந்த வேதங்கள் ஒளிந்த இடமாதலால், வேதஸ்ரேணி எனவும் அழைக்கப்படுகிறது. ஸ்ரேணி என்றால் அடர்ந்த காடு எனவும்,வேதங்களைக் காட்டுக்குள் ஒளித்து வைத்ததால், வேதஸ்ரேணி என அழைக்கப்பட்டதாகவும், கூறப்படுகிறது. மீண்டும் வேதங்கள் வெளிவந்தவுடன் சோமுகன் தனது பாவங்கள் தீர இத்தலத்து இறைவனை வழிபட்டதாக அறியமுடிகிறது.

மார்க்கண்டேயனின் ஆயுற்பாகம் முடியவே, தன் உயிர்நீட்டிப்புக்காக சிவலிங்கத்தைக் கட்டிக் கொண்டான். தருமராஜனாகிய இயமன் தனது பாசக்கயிறை வீசினான், வீசிய பாசக்கயிறு சிவலிங்கத்தின் மீதும் விழுந்ததால், அப்பாவத்தைப் போக்க இங்கு வந்து கோயில் அமைத்து வழிபட்டதாகக்கூறப்படுகிறது.

இயமன் வழிபட்ட தலமாதலால், திருக்கடையூர் போல் இங்கும் சஷ்டியப்த பூர்த்தி, சதாபிஷேகம் போன்றவை பிரார்த்தனை காரணமாக செய்து கொள்ளப்படுகின்றன.

கி.பி 8ஆம் நூற்றாண்டுக்குப்பிறகே இத்திருக்கோயில் கட்டப்பட்டிருக்கிறது என்பதை கட்டிட அமைப்பின் மூலம் அறிய முடிகிறது. உட்பிரகாரத்தில் கருணாம்பிகை அம்மனுக்கு என தனிச் சன்னதியும், தண்டீஸ்வரருக்கென தனி சன்னதியும் இருந்தாலும் அம்மன் சன்னதி பிற்கால அமைப்பைச்சார்ந்துள்ளது.

உட்பிரகாரத்தில் ஈசான்ய மூலையில் சூரியனும், தென்மேற்கு மூலையில் சோமாஸ்கந்தரும், அடுத்தடுத்து சந்திரசேகரர், மகாலட்சுமி, சரஸ்வதி ஆகியோரும் உள்ளனர். வடக்குப் புறத்தில் முருகர், வள்ளி தெய்வானையும், விநாயகரும் ஞானசம்பந்தரும் நடராஜரும், சபா மண்டபமும் உள்ளது. வடகிழக்கு மூலையில் பைரவர் தெற்கு நோக்கியும், மகாவிஷ்ணுவுக்கென தனி பிறை சன்னதியும் உள்ளது.

மூலவர் விமானம் நாகர் அமைப்பில் ஏக கும்பத்துடனும், கருணாம்பிகைக்கு சாளாகார விமானமாக மூன்று கும்பங்களுடனும், நடராஜர் சபை செவ்வக வடிவில் ஒன்பது கும்பங்களுடன், அமைந்துள்ளன.

இத்திருக்கோயிலில் சுமார் 11 கல்வெட்டுக்கள் கண்டறியப்பட்டுள்ளன. அவைகள் சோழர் காலத்தையும் பிற்காலத்தையும் சேர்ந்த கல்வெட்டுகளாக உள்ளன. நிலம் கொடை கொடுத்ததையும், ஆடுகள் தானம் செய்யப்பட்டதையும் குறிக்கின்றன.

தினமும் இரு கால பூஜை நடைபெறும் இத்திருக்கோயிலில் காலை 6.30 மணி முதல் 11.00 மணி வரையிலும், மாலை 4.00 மணி முதல் 8.30 மணி வரையிலும் தரிசனம் செய்ய ஏற்ற வகையில் உள்ளது. ஒவ்வொரு சோமவாரமும், மாதக் கிருத்திகையும், பிரதோஷமும், தமிழ் வருடப்பிறப்பு, சித்ரா பௌர்ணமி, வைகாசி விசாகம், ஆனித்திருமஞ்சனம், பங்குனி உத்திரம் ஆகியவை சிறப்பாகக் கொண்டாடப் படுகின்றன.

சென்னைக்கருகில் சோழர் காலக் கட்டிட பாணி மாறாமல் கட்டப்பட்டுள்ள கருங்கல் திருப்பணி செய்யப்பட்டுள்ள திருக் கோயிலாகும்.

திருக்கோயில்
திங்கள் இதழ்

தனி இதழின் விலை	ரூ 10/
ஓராண்டுச்சந்தா	ரூ 120/
ஐந்து ஆண்டுச் சந்தா	ரூ. 500/
பத்து ஆண்டுச்சந்தா	ரூ 1000/
ஆயுட்காலச்சந்தா	ரூ 1500/

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

''திருக்கோயில்'' இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்!

திருத்திய விளம்பரக் கட்டண விவரம் :

1. பின்பக்க அட்டை வெளிப்புறம் (வண்ணத்தில்)	ரூ 15,000/
2. முன்பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்)	ரூ 10,000/
3. பின்பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்)	ரூ 7,500/
4. உள்புறம் முழுப்பக்கம்	ரூ 5,000/
5. உள்புறம் அரைப்பக்கம்	ரூ 3,000/

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, 119, உத்தமர் காந்தி சாலை சென்னை 600 034 என்ற முகவரிக்கு அனுப்பவும்.

"நான்" யாரென்று எப்படித் தேடித் தெரிந்துகொள்வது?

நம்மையே நாம் கேட்டுக் கொள்ள வேண்டும். முதன் முதலாக, இந்த உடலும் அதன் இயக்கங்களும் (அன்னமயகோசம்) நாமல்ல என்று அறிகிறோம். இன்னும் ஆழ்ந்து விசாரிக்கும்போது மனமும் அதன் விருத்தி பேதங்களும் (மனோமயகோசம்) நாமல்ல என்று உணர்கிறோம். அடுத்தபடி எண்ண விருத்திகள் எங்கிருந்து கிளம்புகின்றன என்று கவனிக்க வேண்டும். விருத்திகள் தாமாகவே கிளம்பிக் கொண்டிருக்கின்றன - ஒன்று, மேலோட்டமான சாதாரண நினைவுகளாகவே, அல்லது ஆலோசிப்பவைகளாகவே எழுகின்றன. அவை புத்தியிலேயே இயங்குகின்றன. அவற்றை புத்திபூர்வமாக உணர்வது யார்? எண்ணங்களின் இருப்பும், அவற்றின் தெளிவான விவரங்களும் இயக்கமும், 'நான்' எனும் தனி ஜீவனுக்கே தெரிகின்றன. இவ்வாறு எண்ணங்களின் இருப்பையும் தொடர்பையும் உணர்வது எதுவோ, அதுவே ஜீவவியக்தி அல்லது 'நான்' எனும் அகங்காரம் (அகந்தை). புத்தி (விஞ்ஞானமயகோசம்) என்பது அகந்தையின் உபாதியே (செருகுவதற்குரிய கவசஉறை மட்டுமே)யன்றி அதுவே அகந்தை ஆகாது. இந்த அகந்தை, அதாவது 'நான்' என்பது என்ன? அது எங்கிருந்து கிளம்புகிறது? கனவிலும் நனவிலும் அதே 'நான்' உடன் தொடர்கிறது. கனவைப் பற்றி நனவில் இப்போது விசாரிக்க வேண்டியது ஒன்றும் இல்லை. விழிப்பு நிலையில் இப்போதுள்ள 'நான்' யார்? 'நான்' தூக்கத்திலிருந்து வெளிப்பட்டவன் எனின், தூங்கும்போது அறியாமை இருளில் 'நான்' அழுந்திக் கிடந்தேன் என்று விழித்தபின் தெரிகிறது. வேத சாஸ்திரங்களும் ஞானியரும் ஐயமறக் கூறும் ஆன்ம சொரூபம் அந்த அழுந்திக் கிடந்த அகந்தையாகிய 'நான்' ஆக இருக்க முடியாது. தூக்கத்தைக் கடந்து இருப்பதும், தூக்கத்தின்போது கனவிலும், பின்னர் நனவிலும் அந்தந்த நிலைகளின் குணங்கள் அறவே இல்லாமல் இருந்து வருவது



எதுவோ அதுவே யதார்த்தமான நான். அவஸ்தாதிரயத்தின் (துயில், கனவு, நனவு ஆகிய மூன்று நிலைகளின்)சாக்ஷியாய் (சான்றாய், நேர்காட்சியாளனாய்), அதிஷ்டானமாய் (உறைவிடமாய்), குணங்குறியற்று இருப்பது எதுவோ அதுவே 'நான்' எனும் ஆன்ம சொரூபம், என்று இவ்வாறு அகமுக விசாரணையால் அனுபவித்துத் தெரிந்து கொள்ள வேண்டும். பஞ்சகோசங்களையும் கடந்து நிற்பது ஆத்ம சொரூபம். அநாத்ம (ஆன்மா இல்லாத) தத்துவங்களை 'நானல்ல, நானல்ல' என்று ஒதுக்கித் தள்ளியபிறகு அங்கே விளங்குவது தூய சத்-சித்-ஆனந்த சொரூபமாம் ஆத்மாவே.

நன்றி - திரு.லா.சு.ரங்கராஜன்
(தமிழாக்கம்)
ஸ்ரீ ரமண மகரிஷியின் பொன்மொழிகள்.

அருள்மிகு மாதவப் பெருமாள் திருக்கோயில்

மயிலாப்பூர்

திருத்தலச்சிறப்பு

சுமார் 800 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகக் கருதப்படும், இத்திருக்கோயில் முதலாழ்வார்கள் காலத்திய திருக்கோயில் ஆகும். இத்திருத்தலம் தோன்றிய விதம், இறைவன் இங்கு வந்து குடிகொண்டு அமிர்தவல்லி தாயாரை மணம்புரிந்தது, மயிலாப்பூர் தோன்றிய விதம், பேயாழ்வார் அவதார வைபவம் ஆகிய புராணவரலாற்றை பிரம்மாண்ட புராணத்தில் ''மயூரபுரி மஹாத்மியம்'' என்னும் தலைப்பில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. அதனில் இந்த இடம் ''மாதவபுரம்'' என குறிப்பிடப்பட்டுள்ளது. கலியுகத்தில் கலிதோஷமில்லாது தவம் செய்யச் சிறந்த இடம் எது? என ஸ்ரீமந்நாராயணனை வினவிய வேத வியாசருக்கு ப்ருகு முனிவர் ஆசிரமம் அமைந்த இந்த மாதவபுரமே சிறந்தது என அருளியதாகக் கூறுகிறது. ஸ்ரீபேயாழ்வார் மாதவபுரம் என அழைக்கப்பட்ட இத்திருக்கோயிலின் தென்கிழக்கே உள்ள ''மணிகைரவம்'' என்னும் வாவியில் அவதரித்தார் என்பது பிரம்மாண்ட புராணத்தில் உள்ள செய்தி ஆகும். அவர் தினந்தோறும் ஸ்ரீமாதவனையே வணங்கி வழிபட்டார்.

தீர்த்தம்

இத்திருக்கோயில் இப்போது இருக்கும் இடத்தில் ப்ருகு முனிவரின் ஆசிரமம் அமைந்திருந்தது. ப்ருகு முனிவரின் ஆசிரமத்தில் இருந்த திருக்குளம்தான் ''சந்தான புஷ்கரணி'' என்ற சிறப்போடு விளங்குகிறது. மாசி மாதத்தில் மகநட்சத்திரம் கூடிய சுக்லபட்சத்துப் பௌர்ணமித் திதியில் சகல தீர்த்தங்களும் இத்திருக்குளத்தை வந்தடையும். அப்போது அதில் நீராடி ஸ்ரீஅம்ருதவல்லி உடனுறை மாதவப் பெருமாளை வணங்கி வழிபட்டோருக்கு புத்திரப்பேறு கிட்டும் என பிரம்மாண்ட புராணத்தில் மயூரபுரி மகாத்மியத்தில் கூறப்பட்டுள்ளது. அண்மைக் காலங்களில் அந்நாளில் இங்கு வந்து இறைவனை வணங்கி பலர் இப்பேற்றைப் பெற்றுள்ளதாக இங்குள்ள பெரியவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஸ்ரீ அம்ருதவல்லித் தாயார்

தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் போர் மூண்டபோது தேவர்கள் எல்லோரும் சேர்ந்து ஸ்ரீமந்நாராயணனை வைகுண்டத்தில் நேரில் வணங்கி அசுரர்களை அடக்கி தங்களுக்கு நிரந்தர அமைதி ஏற்படுத்துமாறு கேட்டுக் கொண்டனர். இதை பெருமாள் ஏற்று, நானும் இலக்குமியும் பூலோகத்தில் அவதரித்து உங்களுடைய ராஜ்ய பரிபாலனத்திற்கு அசுரர்களால் இடையூறு ஏற்படாவண்ணம் பார்த்துக் கொள்கிறோம், என்று அவர்களுக்கு உறுதி வழங்கினார். பிறகு பூலோகத்தில் அவதாரம் செய்து, அமிர்தத்தை கடையும்பொழுது ஸ்ரீ மஹாலக்ஷ்மியானவள் தோன்றினாள். அவரை பெருமாள் மயூரபுரி க்ஷேத்திரத்தில் உள்ள ப்ருகு முனிவர் ஆசிரமத்திற்கு அனுப்பி வைத்தார். இத் திருத்தலத்தில் மஹாலட்சுமி ஸ்ரீஅம்ருதவல்லித் தாயாராக பக்தர்களுக்கு அருள் புரிகின்றார் பிள்ளைப் பேறு வேண்டித் தவம் புரிந்த ப்ருகு முனிவரின் குறை நீக்க மகாலட்சுமி அவரது ஆசிரமத்தை அடைந்து அழகான கன்னிகையாகத் தோன்ற முனிவரும் அக்குழந்தையை அமிர்தத்தோடு தோன்றி அருளிய லட்சுமி ஆதலால் அம்ருதவல்லி எனப்பெயரிட்டு வளர்த்தார்.

ஸ்ரீ மாதவனாக ஸ்ரீமந்நாரயணன் முனிவரின் ஆசிரமம் அடைந்து

அமிர்தவல்லியை மணம் புரிய வேண்ட, முனிவரும் திருமணம் முடித்து வைத்ததாகப் புராணம் கூறுகிறது.

பாற்கடலில் தோன்றிய அமிர்தவல்லி யாகையால் திருமணப் பிரார்த்தனைக்காக கல்கண்டு, குங்குமப்பூ சேர்த்த பால் நிவேதனம் செய்து சேவார்த்திகள் கைப்படவே வழங்கும் வழக்கம் இத்திருக்கோயிலில் உண்டு.

தாயாருக்கு ஒன்பது நாள் நவராத்திரி உற்சவமும் பங்குனி உத்திரத்தில் திருக்கல்யாண உற்சவமும் ஒவ்வொரு வெள்ளிக் கிழமைகளிலும் பிள்ளை வேண்டுவோர் செய்யும் பிரார்த்தனை ஊஞ்சல் உற்சவமும் நடைபெறுகிறது.

கல்யாண மாதவன்

இத்தலத்தில் அமர்ந்த திருக்கோலத்தில் திருமகளும் மண்மகளும் உடன் இருக்க, ஆனந்த நிலைய விமானத்தின் கீழ் உட்கார்ந்த நிலையில் காட்சி தருகிறார். கல்யாணத் திருக்கோலத்துடன் இருப்பதால் இவருக்கு ''கல்யாண மாதவன்'' என்ற திருநாமம் வழங்கப்படுகிறது. திருமண வரம் வேண்டுவோர் 'பிரார்த்தனை நிறைவேற்றும் பெருமாள்' என வழங்கப்படுகிறார்.

ஸ்ரீஅரவிந்த மாதவன்

சங்கு, சக்கரம், அபயம், கதை ஆகியவையுடன் நின்ற திருக்கோலத்தில் ஸ்ரீதேவி பூதேவியுடன் காட்சி தருகிறார்.

நிரஞ்சன மாதவன்

சங்கு சக்கரம் அபய கடிக அஸ்தத்துடன் நின்ற திருக்கோலத்தில் ஸ்ரீதேவி பூதேவியுடன் காட்சி தருகிறார். இவருக்கு சின்னமாதவன் என்ற பெயரும் உண்டு.

ஆண்டாள்

ஸ்ரீஆண்டாள் திருப்பாவை ஒன்பதாவது பாசுரத்தில், ''மாயன் மாதவன் வைகுந்தன்'' என்னும் கடைசி பாசுரத்தில் ''வங்கக்கடல் கடைந்த மாதவனை'' என்று அழைக்கிறாள். ஆண்டாளுக்கு இங்கு தனியான புராதன சன்னதி அமைந்துள்ளது. ஆண்டாள் மடியில் ஸ்ரீமாதவர் சயனத் திருக்கோலம் இத்திருக்கோயிலில் மிகவும் சிறப்பானது.

ஸ்ரீவராகர்

சந்தான புஷ்கரணியின் மேற்குப்பக்கம் கிழக்கு முகமாக திருமகளுடன் ஸ்ரீவராக மூர்த்தி காட்சி அளிக்கிறார். இவருக்கு ''ஞானப்பிரான்'' என்ற சிறப்பு பெயர் உண்டு. தேர்வுக்குச் செல்லும் மாணவர்கள் வந்து வணங்கி, வேண்டி பிரார்த்தனை நிறைவேற்றும் பிரார்த்தனைத் தெய்வமாக இவர் இருக்கின்றார்.

ஸ்ரீராமர்

மூலவர் இராமர் சீதை லட்சுமணர் அனுமாருடன் அருள்பாலிக்கிறர்.

ஸ்ரீவேணுகோபாலன்

ஸ்ரீ வேணுகோபாலன் உற்சவ மூர்த்தி சங்குசக்கரத்துடன் காட்சி அளிக்கிறார்.

ஸ்ரீசம்பத்குமாரர் (செல்லப்பிள்ளை)

ஸ்ரீ சம்பத்குமாரர் உற்சவ மூர்த்தி சங்கு சக்கர அபய கதையுடன் காட்சி அளிக்கிறார். இவருடைய திருப்பாதங்களில் ஸ்ரீ மகாலட்சுமி அமர்ந்துள்ளார்.

அருளாளர் ஸ்ரீ பேயாழ்வார்

முதலாழ்வார்களில் மூன்றாமவரான ஸ்ரீபேயாழ்வார் இத்திருக்கோயிலுக்கு அருகிலேயே உள்ள ''மணிகைரவம்'' என்ற வாவியில் செவ்வல்லிப்பூவிலே ஐப்பசி மாதம் சதய நட்சத்திரத்தில் திருமாலின் ''நந்தகம்'' என்னும் வாளின் அம்சமாக அவதரித்தார். அவர் அருளிச் செய்த அந்தாதியாகிய நூறு பாசுரங்களும் மூன்றாம் திருவந்தாதி எனப் பெயர் பெற்று, நாலாயிர திவ்யபிரபந்தத்தில் ஓர் அங்கமாக அமைந்துள்ளது. இவருக்குத் ''தமிழ்த் தலைவன்'' என்னும் பெயருண்டு.

ஸ்ரீ பேயாழ்வார் இத்திருத்தலத்திலும் அனேக ஆழ்வார்கள் அவதரித்தத் தலங்களில் இருப்பது போலவே அமர்ந்த

கோலத்துடன் இருக்கிறார். உற்சவர் நின்ற கோலத்துடன் இருக்கிறார். ஒவ்வொரு மாதமும் சதய நட்சத்திரத்தில் திருவீதிப் புறப்பாடும், மாசி மாதத்தில் தெப்ப உற்சவமும் நடைபெறுகிறது. இந்த மாதவபுரத்தில் திருமழிசைஆழ்வாருக்கு ஞான உபதேசம் செய்ததால், ஐப்பசி மாதத்தில் ஸ்ரீபேயாழ்வார் அவதார உற்சவத்தில் 4ம் நாள் திருமழிசைஆழ்வாருக்கு ஞான உபதேசவைபவமும், 8ம் நாள் திருக்கோவிலூர் வைபவமும் மற்ற நாட்களில் ஒவ்வொரு வாகனத்திலும் திருவீதி புறப்பாடும் நடைபெறுகிறது.

திருமழிசைஆழ்வார்

திருமழிசைஆழ்வாரை ஸ்ரீபேயாழ்வாரின் வைணவத் தொண்டும், அவருடைய மூன்றாம் திருவந்தாதியும் கவர்ந்த காரணத்தால் தன்னை அவருடைய சீடராகவும் ஆழ்பற்றுக் கொண்டவராகவும் மாற்றிக் கொண்டார். பிறகு நான்காம் திருவந்தாதியையும், திருச்சந்த விருத்தத்தையும் இயற்றினார். நாலாயிரத்தில் இது ஒரு அங்கமாக உள்ளது. இவர் தனது குருவான பேயாழ்வாருக்கு உரிய கடவுளான இத்தலத்தில் உள்ள மாதவப் பெருமாளைப் பாடுகிறார் எனகூறுவார்கள்.

''வெறியாய மாயவனை மாலவனை
மாதவனை ஏத்தாதார்
ஈனவரேயாதலால் இன்று''

''சூதாவதென்னெஞ்சத் தெண்ணினேன் -
சொல்மாலை
மாதாய மாலவனை மாதவனை யாதானும்
வல்லவா சிந்தித்திருப்போற்கு வைகுந்தத்
தில்லையோ சொல்லீர் இடம்?''

என்றெல்லாம் பாடுகிறார்.

1956 ஆண்டு இத்திருக்கோயிலுக்கு அருகாமையில் அமைந்துள்ள சமஸ்கிருத கல்லூரியில் காஞ்சி மாமுனிவர் பெருந்தகை சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் தங்கியிருந்த இரண்டு திங்கள் காலத்திலும், இத்திருத்தலத்தில் அமைந்துள்ள சந்தான புஷ்கரணி திருக்குளத்தில் நீராடி பெருமாளை வழிபட்டார் என்பது இத்திருக்கோயிலுக்கு மேலும் ஒரு சிறப்பு. இத்தலத்தின் சிறப்பினை உணர்ந்த அவரே பிரம்மாண்ட புராணத்தில் உள்ள மயூரபுரி மகாத்மியம் ஓலைச்சுவடியாக இருந்ததை 1957ல் அச்சேற்றியுள்ளார். இத்தகைய புராதன சிறப்பு மிக்க இத்திருக்கோயிலின் குடமுழுக்கு விழா 29.1.2007 அன்று வெகு விமரிசையாக நடைபெற்றது. அனைவரும் மாதவனை வழிபட்டு வாழ்வில் வளம் பெறவோமாக.

சிறப்பாசிரியர் மற்றும் வெளியிடுவோர் : திருமிகு **த. பிச்சாண்டி**, இ.ஆ.ப., சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர்
தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034. தொலைபேசி : 28334811/12/13
ஆசிரியர் (கூ.பொ.) : ம. தேவேந்திரன், பி.எஸ்சி., பி.எல்., உதவி ஆணையர்
அச்சிடுவோர் : குணசுந்தரி மாடர்ன் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை -21. தொலைபேசி : 25967929



அருள்மிகு மூங்கிலணைக் காமாட்சி அம்மன் திருக்கோயில்,

தேவதானப்பட்டி,
பெரியகுளம் வட்டம், தேனி மாவட்டம்

மாசி மகாசிவராத்திரி

திருவிழா அழைப்பிதழ்

நாள் 16- 02- 2007 முதல் 23- 02- 2007 வரை - மறுபள்ளயம் 23- 02- 2007

அன்புடையீர்,

அருள் வழங்கும் அம்மன் குடிகொண்டுள்ள ஆலயங்களில் ஸ்ரீ மூங்கிலணை காமாட்சி அம்மன் முதன்மையாக நின்று, தன்னை வணங்கும் தன் பக்தர்களின் குறை தீர்க்கும் தாயாக எழுந்தருளியிருக்கும் இத்தலத்தில் மாசி மகா சிவராத்திரி திருவிழா 16-02-2007 வெள்ளிக்கிழமை முதல் 23-02-2007 வெள்ளிக்கிழமை வரை எட்டு தினங்கள் மிகச் சிறப்பாக நடைபெற உள்ளது. மறுபள்ளயம் 23-02-2007 வெள்ளிக்கிழமை நடைபெறும்.

பக்தர்கள் அனைவரும் கலந்து கொண்டு அம்மன் அருள்பெற வேண்டுகிறோம்.

குறிப்பு

விழா நாட்களில் பக்தர்கள் தரிசனத்திற்காக காலை 6 மணி முதல் இரவு 11 மணி வரை தொடர்ந்து நடை திறந்திருக்கும்.

தினசரி இரவு மஞ்சளாற்றங்கரையில் இருந்து தேவராட்டம், மேளதாளங்கள், வானவேடிக்கையுடன் பள்ளயம் புறப்பட்டு இரவு 7 மணிக்கு திருக்கோயில் வந்தடையும்.

விழா நாட்களில் தினசரி இரவு ஆன்மிக சொற்பொழிவுகள், பக்தி கலைநிகழ்ச்சிகள் நடைபெறும்.

விழா நாட்களில் வத்தலக்குண்டு, பெரியகுளம் மற்றும் மாவட்டத்தின் பிற பகுதிகளிலிருந்து திருக்கோயிலுக்கு 24 மணி நேரமும் அரசு சிறப்பு பேருந்து வசதிகள் உண்டு.

ரூ. 1,001/- செலுத்தி நிரந்தர வைப்பு நிதியாக செலுத்தி நித்யபூஜை கட்டளையில் அங்கத்தினராக சேர வேண்டுகிறோம்.

இப்படிக்கு

என்.வி.தனராஜ் பாண்டியன்
பரம்பரை நிர்வாக அறங்காவலர்

மு.இராமசாமி எம்.ஏ.,
செயல் அலுவலர்

என்.வி.கனகராஜ் பாண்டியன்
பரம்பரை அறங்காவலர்

பதிவு எண் : TN / PMG / (CCR) / 707 / 06-08 / WPP No. 451/06-08

அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில்

இராமேசுவரம், இராமநாதபுரம் மாவட்டம்.

இராமாயண கால வரலாற்றோடு தொடர்புடைய இராமேசுவரம், இந்திய ஒருமைப்பாட்டின் உறைவிடமாகவும் திகழ்கிறது. நம் நாட்டில் உள்ள புண்ணிய ஷேத்திரங்கள் நான்கில் வடக்கே மூன்றும், தெற்கே ஒன்றுமாக அமைந்துள்ளதோடு, இராமேசுவரம் மட்டுமே விசேஷ ஸ்தலமாக அமையப்பெற்றது. அதுபோல பன்னிரெண்டு ஜோதிர்லிங்கங்களுள் வடக்கே பதினொன்றும், தெற்கே ஒன்றுமாக அமைந்துள்ளது. இத்தகைய சிறப்புடைய இராமேசுவரம், மூர்த்தி, தீர்த்தம், ஸ்தலம் ஆகிய முப்பெருமைகளும் உடைய புண்ணிய பூமியாகும். நாவுக்கரசரும், ஞான சம்பந்தரும், இத்தலத்தின் பெருமை குறித்து பல்வேறு பாக்களை பாடியுள்ளனர்.

ஆலய அமைப்பும், அடுக்கடுக்காக பிரகாரங்களும் கட்டிட கலைக்கு தனிச்சிறப்பூட்டுவதாக அமைந்துள்ளது. 1212 தூண்களும், 2250 அடி சுற்றளவும் கொண்ட மூன்றாம் பிரகாரம் உலகிலேயே பெரிய முற்றமாகவும் கட்டிடக்கலையை சிறப்பிப்பதாகவும் அமைந்துள்ளது.

இத்திருக்கோயிலுள் 22 புண்ணிய தீர்த்தங்கள் அமைந்துள்ளது. அவற்றில் நீராடுவது மிகச் சிறப்பானதும், அவசியமானதுமாகும்.

பக்தர்கள் ஆண்டிற்கொருமுறை தாங்கள் விரும்பும் ஒரு நாளில் அர்ச்சனை அபிஷேகங்கள் செய்ய நிரந்தரக்கட்டளைகள் ஏற்படுத்திக் கொள்ளலாம்.

1) ருத்ராபிஷேகம் செய்ய	ரூ. 15,000/-
2) ஒருகால பூஜை நடத்த	ரூ. 7,000/-
3) கங்காபிஷேகம் செய்ய	ரூ. 2,500/-
4) உச்சிக்கால நெய்வேத்ய இலவசபிரசாதம் வழங்க	ரூ. 10,000/-
5) அன்னதானம் வழங்க	ரூ. 30,000/-

திருக்கோயிலின் முக்கிய திருவிழாக்கள்

1) மாசி மகாசிவராத்திரி திருவிழா	-	பிப்ரவரி மாதம்
2) ஆடித்திருக்கல்யாண திருவிழா	-	ஜூலை - ஆகஸ்ட் மாதங்களில் நடைபெறும்

உற்சவ மூர்த்திகள் புறப்பாடுகள்

1. தங்கரதம் புறப்பாடு செய்ய கட்டணம்	- ரூ. 2,000/-
2. வெள்ளிரதம் புறப்பாடு செய்ய கட்டணம்	- ரூ. 7,500/-
3. பஞ்சமூர்த்திகள் புறப்பாடு செய்ய கட்டணம்	- ரூ. 10,000/-
4. அன்னதானம் ஒரு நாள் மட்டும் வழங்க	- ரூ. 3,300/-

தங்கும் விடுதிகள்

இத்திருக்கோயிலில் சேவார்த்திகள் தங்குவதற்கு தங்கும் விடுதிகள் வசதியுள்ளது. மேற்படி விடுதிகள் முன்பதிவு வசதியும் செய்யப்பட்டுள்ளது. முன்பதிவு செய்ய ''இணை ஆணையர்/ செயல் அலுவலர், அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேசுவரம்'' என்ற முகவரிக்கு மணியார்டர் அல்லது வரைவோலை அனுப்பி முன்பதிவு செய்து கொள்ளலாம். தங்கும்விடுதி தொலைபேசி எண்.221292, திருக்கோயில் அலுவலக தொலைபேசி எண். 221223.

EMAIL ADDRESS : lordramnath@sanchanet.in
WEBSITE ADDRESS : rameswaramtemple.org.
E.POOJA BOOKING: www.tntemple.org.
PHONE : OFFICE 04573 -221223
REST HOUSE : 04573 - 221292

இவண்
திருக்கோயில் நிர்வாகம்